Registered as a News Paper in Sri Lanka.

தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

தினக்கதிர்

உங்களின் சகல விதமான
அச்சுத்தேவைகளுக்கும்
இன்றே நாடுங்கள்

ஈஸ்ரன் கிராபிக்ஸ்

230, திருமலை வீதி,
மட்டக்களப்பு.
☎24821

ஒலி - 01 - கதிர் - 209 | 09-11-2000 | வியாழக்கிழமை | பக்கங்கள் - 08 | விலை - ரூபா 5/-

புனர் வாழ்வு முகாம் கொலை பற்றி சர்வதேச விசாரணை தேவை !

குற்றவியல் வழக்கறிஞர் பெர்னாண்டோ

(நமது நிருபர்)

பண்டாரவளை பிந்துனுவெவப் புனர்வாழ்வு முகாமில் இடம் பெற்ற படுகொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு வெளிநாடுகளில் இருந்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர்கள் அழைக்கப்பட வேண்டும் என குற்றவியல் வழக்கறிஞரான இலங்கை வழக்கறிஞர் சங்கத்தின் மனித உரிமைக் குழுத் தலைவர் டென்மார்க் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பண்டாரவளை பிந்துனுவெவப்புனர் வாழ்வு முகாமில் இடம் பெற்ற படுகொலைச் சம்பவம் தொடர்பாக முகாமிற்கு விஜயம் மேற்கொண்டு விசாரணை நடத்திய பின்னர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் கடந்த இருபதாண்டு காலத்தில் இலங்கைத் தீவு கண்டிராத படுமோசமான இனக்கலவர சம்பவங்களை கண்டும் பண்டாரவளைப் பொலிஸார் உணர்ச்சியற்றவர்கள் போல் பாராமுகமாக இருந்துள்ளனர்.

தாக்குதல் சம்பவங்களில் பொலிஸாரும் ஈடுபட்டனர் என்பதற்கான சான்றுகள் இல்லை எனினும் அவர்கள் நடவடிக்கை எடுக்கத் தவறியமைபற்றி பல சிறைக்கைதிகள் வீணாக

8ம் பக்கம் பார்க்க

இராணுவத் தீர்வா, அரசியல் தீர்வா எதை விரும்புகின்றது அரசு ?

(கொழும்பு)

அரசாங்கம் இராணுவத் தீர்வையா? அல்லது அரசியல் தீர்வையா ? பின்பற்றப் போகின்றது. என்பதை விரைவில் தீர்மானிக்க வேண்டும் என எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் நோர்வே தூதுக்குழுவினருக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் இடையில் வன்னியில் இடம் பெற்ற சந்திப்பு அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கான ஒரு முக்கிய நிகழ்வாகும். இவ்வாறான ஒரு சூழ்நிலையில் அரசாங்கம் இராணுவத் தீர்வையா அல்லது

(8ம் பக்கம் பார்க்க)

கேட்கின்றார் ரணில்

"பயப்படவேண்டாம் அண்ணன்" எனக் கூறிய சில வினாடிகளில் துப்பாக்கி சூடுபட்டு கீழே விழுந்தார்

(எமது நிருபர்)

மட்டக்களப்பு நகரிலிருந்து வாழைச்சேனை நோக்கி நானும் நிமலன் மாஸ்ரரும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது கிரான் கூட்டுறவு சங்க கட்டிடப்பக்கமாக வெடிச்சத்தம் கேட்டது. வெடிச்சத்தம் கேட்கிறது என நான் கூறிய போது பயப்பட வேண்டாம் என கூறிய நிமலன் சில வினாடிகளில் துப்பாக்கி சூடுபட்டு கீழே விழுந்தார். துப்பாக்கி சூடுபட்ட நான் பின்னர் மயக்கமுற்றுவிட்டேன் என செவ்வாய் மாலை சுட்டுக்கொல்லப் பட்ட மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் நிமலன் சௌந்தர நாயகத்துடன் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த வந்தாறு மூலையைச்சேர்ந்த செல்லத்தம்பி லோகநாதன் (46வயது) தெரிவித்தார். வீதியோர்த்தில் அந்நேரம் படையினர் நின்றிருந்ததை கண்டேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பொதுவைத் தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் இவர் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்திலேயே இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- "ஓய்வு பெற்ற கூட்டுறவு ஊழியரான நான் தேர்தல் காலத்தில் நிமலன் சௌந்தரநாயகத்தின் வெற்றிக்காக உழைத்தேன். நான் அவரின் உறவினரும் கூட. அவர் எங்காவது போவதாக இருந்தால் என்னையும் கூட்டிச் செல்வார். அவர் மெய்க்காப்பாளர்களாக யாரையும் வைத்திருக்கவில்லை.

"சம்பவதினம் -செவ்வாய்கிழமை- காலை 7.30 மணிக்கு மோட்டார்

(8ம் பக்கம் பார்க்க)

கடைகள், அலுவலகங்களை மூடி கல்குடா தொகுதி சோகமயம் !



(ஓட்டமாவடி நிருபர்)

கடந்த செவ்வாய்க்கிழமை துப்பாக்கிச் சூட்டில் பலியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமலன் சௌந்தர நாயகத்தின் பிரிவுத்துயர் தாங்க முடியாது கல்குடாத் தொகுதி மக்கள் ஆழ்ந்த சோகத்திலும் துக்கத்திலும் இருக்கும் அதேவேளை, நேற்று கல்குடா தொகுதி எங்கும் கடைகள் பூட்டப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப் பட்டது.

நேற்று புதன்கிழமை பொதுமக்கள் தினமாக இருந்த போதிலும் வாழைச்சேனை, ஓட்டமாவடி பிதேசங்களில் அரச அலுவலகங்கள் திறந்திருந்தும் பொதுமக்களின் நடமாட்டமின்றி வெறிச்சோடியே காணப்பட்டது. அலுவலகங்களில் ஊழியர்களும் குறைவாகவே காணப்பட்டனர்.

நேற்று மறைந்த பாராளுமன்ற உறுப்பினரின் பூதவுடல் ஏறாவூர் வைத்திய சாலையில் இருந்து பி.ப. 2.00 மணியளவில் அன்னாரின் வாழைச்சேனை இல்லத்திற்கு கொண்டுவரப்பட்டது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

(8ம் பக்கம் பார்க்க)

நிமலனின் இடத்தில் துணைவியை நியமிக்க இளைஞர் வற்புறுத்தல் !

(நமது வாழைச்சேனை நிருபர்)

நேற்று முந்தினம் பிற்பகல் அகால மரணமான பாராளுமன்ற உறுப்பினர் நிமலனின் இல்லத்திற்கு அஞ்சலி செலுத்தச் சென்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியிடம் பெருந் தொகையான பொதுமக்களும் இளைஞர்களும் குழுமிநின்று மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் நிமலனின் இடத்திற்கு அன்னாரின் மனைவியான ஜெயரஞ்சனி சௌந்தரநாயகத்தை நியமிக்கும் படி கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு ஆனந்த சங்கரி தேர்தல் சட்டத்திற்கு முரணாக வேறு ஒருவர் நியமிக்க வேண்டுமானால் தேர்தலில் போட்டியிட்ட ஏனைய தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்கள் இராஜினாமா செய்யும் பட்சத்தில் மட்டுமேஇது சாத்தியம் எனத்

(8ம் பக்கம் பார்க்க)

நிமலனின் இடத்துக்கு செல்வராஜா நியமனம் ?

(அரியம்)

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் நிமலன் சௌந்தர நாயகம் மரணம் காரணமாக ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராஜா நியமனம் பெறவிருக்கின்றார்.

விருப்புத் தெரிவு வாக்குகளின் அடிப்படையில் இந்நியமனம் அமைகின்றது.

அண்மையில் நடை பெற்ற பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி 54,448 வாக்குகளை பெற்று போனஸ் உட்பட இரு ஆசனங்களை பெற்றது.

விருப்புத் தெரிவு வாக்குகள் அடிப்படையில் 16,452 விருப்பு வாக்குகள் பெற்ற நிமலன் சௌந்தர நாயகம்.12,605 விருப்பு வாக்குகள் பெற்ற ஜோசப் பரராஜ சிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். நிமலன் சௌந்தர நாயகம் மரணம் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத் திற்கு 11,698 விருப்புத்தெரிவு வாக்குகள் பெற்றுள்ள பொன் செல்வராசா நியமிக்கப்பட விருப்பதாக தேர்தல் திணைக்கள அவதானி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை கல்குடாத் தொகுதியில் உள்ளவர்க்கே இந்நியமனம் வழங்கப்பட வேண்டும் என நேற்று ஏறாவூர் வைத்திய சாலையில் குழுமியிருந்த கல்குடாத் தொகுதியை சேர்ந்த சிலர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரியிடம் முறையிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு இராணுவ வீரர் பலி!

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை கன்னியா வீதியில் விக்கம் விதாரணச் சந்தியில் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் ஒரு இராணுவ வீரர் உயிரிழந்ததுடன் மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.இச்சம்பவம் நேற்று முன்தினம் மதியம் 11.30 மணியளவில் இடம் பெற்றது.

தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055, 24821
பெ(F)க்ஸ் : 065 - 23055
E-mail :- tkathir@snet.lk

இங்கும் கொலைக்கலாசாரமா?

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதன்மைப் பாராளுமன்ற உறுப்பினர் நிமலன் மாஸ்டர் என்றழைக்கப்படும் நிமலநாயகம் சவுந்திரநாயகம் இனந்தெரியாதவர்களினால் நேற்று முன்தினம் மாலை சுட்டுக்கொல்லப்பட்ட செய்தி மட்டக்களப்பை மட்டுமல்ல நாட்டிலுள்ள தமிழ் மக்கள் அனைவரையுமே அதிர்ச்சி அடையச் செய்திருக்கிறது.

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்பான்மையான மக்கள் விரும்பி தமது விருப்பு வாக்குகளை அளித்து தங்கள் முதன்மைப்பிரதிநிதியாகப் பாராளுமன்றத்துக்கு நிமலன் மாஸ்ரரைத் தெரிவுசெய்தார்கள்.

பாராளுமன்றத்துக்குச் சென்று தம்மைத் தெரிவுசெய்த மக்களின் சார்பில் குரல் கொடுப்பதற்காகக் காத்திருந்த நிமலநாயகம் சவுந்திரநாயகம் தம்மக்கள் மீது வைத்திருந்த அளவற்ற நம்பிக்கையினால் அரசாங்கம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கும் பாதுகாப்பைக் கூட வேண்டாமென்று நிராகரித்தவர்.

மக்கள் சேவைக்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்ட நிமலன் மாஸ்ரர் 1984ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் சிறைவாசமும் அனுபவித்தவர்.

இரு தினங்களுக்கு முன்னர் தான் தமது ஐம்பதாவது பிறந்த தினத்தை அமைதியாகக் கொண்டாடிய நிமலன் பாராளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக செல்லவேண்டிய சமயத்தில் இனந்தெரியாத கொலையாளிகள் வேறு உலகத்துக்கு ஈவிரக்கமின்றி அனுப்பி வைத்திருக்கின்றனர்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலம் நீடிக்கும் பிரேரணையை எதிர்த்து பாராளுமன்றத்தில் தமது கன்னிப்பேச்சை நிகழ்த்தவிருந்த நிமலனுக்கு அந்தச் சந்தர்ப்பம் இல்லாமல் செய்யப்பட்டு விட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் நிமலன் கொலை செய்யப்பட்ட இரண்டு மணி நேரத்தில் மற்றொருவரும் மட்டக்களப்பில் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பது மட்டக்களப்பிலும் துப்பாக்கிக்கலாசாரம் பரவத்தொடங்கி விட்டதா என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பில் பல பகுதிகளிலும் பல வீதிகளிலும் இராணுவத்தினதும் பொலிசாரினதும் சோதனைச்சாவடிகள் நிறையவே நிறுவப்பட்டிருக்கின்றன.

இச்சாவடிகளைக் கடந்து செல்லும் வாகனங்கள் அவை சிறியவையாயினும் பெரியவையாயினும் சோதனைக்குள்ளாகாமல் கடந்து செல்வதற்கு அனுமதிக்கப்படுவது இல்லை.

இரண்டு சக்கர சைக்கிள்களில் செல்லும் பாடசாலை பிள்ளைகளும் அவர்கள் கொண்டு செல்லும் புத்தகப் பைகள் கூடச் சோதனையிடப்பட்ட பின்னரே இவற்றைக் கடந்து செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

நிமலன் மாஸ்ரர் மட்டக்களப்புக்கு மோட்டார் சைக்கிளில் சென்று தமது அலுவல்களைக் கவனித்து விட்டு வாழைச்சேனைக்குத் திரும்பிச் சென்றார். வழியில் விடுவிக்கப்பட்ட பிரதேசமான கிரானில் பிரதான வீதியில் சென்று கொண்டிருக்கும் போதே இனந்தெரியாதவர்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்திருக்கிறார்கள்.

இச்சம்பவம் நிகழ்ந்த இடத்திலிருந்து சுமார் இருநூறு மீற்றர் தூரத்தில் இராணுவத்தினர் ரோந்து பணியிலீடுபட்டிருக்கின்றனர்.

பார்க்கும் இடமெல்லாம் நிக்கறா நிறைந்திருக்கும் இராணுவத்தினரையும் பொலிசாரையும் போதாக்குறைக்கு துணைப்படையினரையும் தாண்டி துப்பாக்கி ஏந்தியவர்கள் நடமாடத்திரிய முடிகிறதென்றால் ஆச்சரியம் தான்!

மட்டக்களப்பில் மட்டுமல்ல நாட்டின் இதர பகுதிகளிலும் இப்போது ஆயுதம் தாங்கியவர்களின் நடமாட்டம் அதிகரித்திருக்கிறது. துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

சட்டத்தையும் ஒழுங்கையும் அமைதியையும் விரும்பும் மக்கள் தொகை குறைந்து வன்முறையிலீடுபடுவோரே அதிகரித்து வருகின்றனர்.

இதற்கு ஆயுதங்கள் எல்லோருக்கும் சுலபமாக கிடைப்பது தான் காரணமென்றும் சொல்லலாம்.

இராணுவத்திலிருந்து சொல்லிக் கொள்ளாமல் ஆயுதங்களுடன் வெளியேறியவர்கள் இன்னமும் நாட்டில் நடமாடத்திரிகிறார்கள்.

தமிழர்களுக்கு அதாவது பயங்கரவாதிகளுக்கு எதிராக வடக்கிலும் கிழக்கிலும் லலித் அத்துலத் முதலியினால் கடுங் குற்றவாளிகள் என்று கருதப்பட்டோரில் சிலருக்கு ஆயுதங்கள் கொடுத்துக் குடியேற்றப்பட்டவர்கள் அங்கிருந்து வெளியேறிய போது ஆயுதங்களுடன் சென்றனர்.

"பயங்கரவாத ஒழிப்பு" என்ற பெயரில் தமிழர் பகுதிகளில் வாழும் குடியேற்றப்பட்டவர்களுக்கும் ஆயுதங்கள் வழங்கப்பட்டன.

ஆயுதக்குழுக்களாக இருந்து ஜனநாயக வழிக்குத் திரும்பியவர்களில் சிலர் குழுக்களாகவும் இல்லாமல் ஜனநாயகவழிக்கும் முழுமையாகச் செல்லாமல் இருக்கின்றனர்.

"பயங்கரவாத ஒழிப்பு" என்ற பெயரில் தமிழர்களுக்கு எதிராக சிங்களவர்கள் ஆயுதங்கள் வைத்திருப்பதற்கும் வாங்குவதற்கும் சட்டரீதியாக அல்லாமலும் உத்தியோகப் பற்றற்ற முறையிலும் அனுமதி கிடைத்திருப்பதாகவே தோன்றுகிறது.

இந்நிலையில் குடிசனக் கணக்கெடுப்பு நடத்துவதுபோல் நாடு முழுவதும் ஆயுதங்களின் கணக்கும் எடுக்கப்பட வேண்டும்

இவை எல்லாவற்றையும் விட இனப்பிரச்சினைக்கு வெகுவிரைவில் தீர்வுக்காணப்பட்டு அமைதியை ஏற்படுத்தி சட்டவிரோதமாக வைத்திருக்கும் ஆயுதங்கள் யாவும் மீட்கப்பட வேண்டும். இல்லைவேல் நாட்டை ஆயுத அரவிலிருந்து காப்பாற்றுவது பெரும் கஷ்டம்!

களுவாஞ்சிக்குடியில் சாயி சேவையில் ஒரு சாயிசேவா நிலையம்

களுவாஞ்சிக்குடி பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையம் புதிதாக அமைத்த பகவானின் இல்லமான "ஸ்ரீ சத்ய நாராயண மந்திரம்" கிரகப் பிரவேச திருவருள் நிகழ்வு 09-11-2000 அன்று மு.ப.9.24 மணி தொடக்கம் 11 மணிவரையான தனுலக்கின கூபவேளையில் சிவஸ்ரீ க. நீதிநாதக் குருக்கள் அவர்களின் கிரியை நிகழ்வுடனும், விழா நிகழ்வானது 10-11-2000, வெள்ளிக்கிழமை ஸ்ரீ ந.தியாகராசா அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. இதன் போது பல்வகை விழா நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

களுவாஞ்சிக்குடி பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தியானது 1977, வைகாசி, 03இல் மட்டு நகர் சமித்தியின் தலைவர் தலைமையில் அமரத்

துவம் அடைந்த சி. இராசையா வீட்டில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.அப்போது நிலையத்தின் தலைவராக ஸ்ரீ.க.சண்முகம், செயலாளராக ஸ்ரீ.க.இராசையா செயலாற்றி வந்தனர். சேவா நிலையமானது சமித்தி வடிவம் பெறமுன்பே 1976இல் ஓய்வு பெற்ற மருத்துவஅதிகாரி திரு.க.சண்முகம் வழிநடத்தலின்கீழ் வியாழக் கிழமைகளில் ஆலயங்கள் தோறும் தன்பனியை ஆரம்பித்திருந் தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப காலத்தில் வியாழக்கிழமை தினங்களில் மட்டும்பஜனைபணியை ஆரம்பித்து பின்னர் அகில இலங்கை பகவான் ஸ்ரீசத்தியசாயிசேவா நிலையங்களின் இணைப்புக் குழுவின் வழிகாட்டலின் பெயரில் விசேட தினபஜனைகளும் நடாத்தப்பட்டன.

அத்துடன் சேவாதளப் பணிகளும் நடாத்தப்பட்டு அங்கத்தவர்களுக்கு பயிற்சி யளிக்கப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இவ்வாறு 1980 இல் மக்கள் வங்கி முகாமையாளர் ஸ்ரீ.யோ.நேசராசா தலைமையில் சேவா நிலையப் பணிகள் விருட்சமானது இக்காலப்பகுதியில் சமித்தியின் ஆத்மீக, கல்வி, சேவைப் பணிகள் நன்கு வளர்ச்சி கண்டமை குறிப்பிடத்தக்கது. சேவைப்பணிகளின் வரிசையில் பாலவிஹாஸ் மாணவர்களுக்கான பாலவிஹாஸ் வகுப்புக்களும், சாயி பக்தர்களுக்கான கல்வி வட்ட வகுப்புக்களும், இதனைவிட கழுந்தன், வெளி போன்ற கிராமங்களில் வைத்திய இலவச சேவைகள், இதனை விட கிராம வீதித் துப்புரவு, பாதை அமைப்பு போன்றபணிகள் நிறைவேற்றப்பட்டன.

1984 இல் சமித்தியின் தலைமைபொறுப்பை ஸ்ரீ.க.இராசையா ஏற்றுக்கொண்டு தனது இல்லத்தில் பகவான் பணியை தொடர்ந்தார். இவர் காலத்தில் பழுகாமம்,மகிழூர், கோட்டைக் கல்லாறு,களுதாவளை, கோடை மேடு கிராமங்களிலும் பகவான் பணிகள் சமித்தியின் சேவைகளாக, பலரும் பயன் பெற வழிவகுத்தது. குறிப்பாககல்விவட்ட வகுப்புக்

எஸ். ரவீந்திரன்

களில் மண்டூர் சமித்தி நிருவாகிகளும் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வுக்கு அமரர்குஞ்சுத்தம்பி தருமரெத்தினம்,டாக்டர்.ஸ்ரீ.த. கணபதிப் பிள்ளை போன்றோர் வெளியில் இருந்து உதவி செய்தமையும் குறிப்பிடத்தக்கதே.

இவ்வேளையில் தலைவரும், பாலவிஹாஸ் குருவாகிய ஸ்ரீ.க.இராசையா காரைதீவு, கோட்டைகல்லாறு பாலவிஹாஸ் மாணவர்களுக்கு வகுப்புக்களும், ஒன்றுகூடல்நிகழ்வுகளும் மேற் கொள்ளப்பட்டன. ஒன்றுகூடல் நிகழ்வு ப.ஸ்ரீ.ச.சா.சேவா நிலையங்களின் கிழக்கு பிராந்திய தலைவர் டாக்டர் ஜெகநாதன் தலைமையில் இடம் பெற்றமையும் தனிச்சிறப்பே. இக்காலப்பகுதியில் களுதாவளை திருஞானசம்பந்தர் குருகுலமாணவர்களுக்கு மனித மேம்பாடு கல்வி வகுப்புக்களும் நடாத்தப்பட்டன.

இத்தொடர்பாதையில் 1992இல் புதிய நிர்வாக சபையின் தலைமையினை ஸ்ரீ.ந.தியாகராசா ஏற்றுக்கொண்டுபுதிய உத்வேகத்துடன் சாயி நிலையத்தின் நடவடிக்கைகளை விஸ்தரிப்பதில் தன்னைமுழுமையாக அர்ப்பணித்துக் கொண்டுள்ளார். இப்பணியின்பாதையில் களுவாஞ்சிக்குடி சாயி நிறுவனத்துக்கென சொந்தமான ஒரு பஜனை மண்டபம் இல்லாத குறையினை உணர்ந்து கொண்ட ஒரு "சாயிசகோதரி" சாயி சேவைக்காக தன்னை முற்று முழுதாக அர்ப்பணம் செய்து கொண்டிருப்பது அனைவராலும் நோக்கத் தக்கதே. இத்தொடரின் வழியில் 1985 இல் சாயி சகோதரியினால் காணிக் கொள்வனவு நடந்தது. இருந்தும் "அடுத்து முயன்றாலும் ஆகும் நாளன்றி எடுத்த கருமங்கள் ஆகா" என்ற தத்துவ உண்மைக்கமைய 15 ஆண்டுகளின் நிறைவின் பின்னால் அதே சாயிசகோதரியின் முழுமையான பங்களிப்பினால் அச்சகோதரியின் கனவு நனவாகி அதே காணியில் இச்சத்திய சாயி மண்டபம் நிறைந்திருப்பது அனைவரையும் நிறைவடையச் செய்துள்ளது. 1998 இல் ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் ஈராண்டுக்குள் சாயி மண்டபம் நிறைவு கண்டுள்ளமையும், பகவானின் அருள் ஆசியே.

இந்நன் நிகழ்வுக்கு சாயி சகோதரியின் மனமுவந்த பங்களிப்பும் நிலைய தலைவரின் அரிய அர்ப்பணிப்புடனான சேவையுமே. இச்சேவையின் தேவை களுவாஞ்சிக்குடி கிராமத்தில் இருந்து ஆன்மீக அலை எங்கும் பரந்து விரிந்து அனைவருக்கும் அருள் ஆசி கிடைக்க வழிவகுக்கும் என்பது திண்ணம். இவ்வாண்மீக புரட்சிக்கு வழிவகுத்தமுன்னாள் தலைவர். ஸ்ரீ.க.சண்முகம் அவரது புதல்வர் ஸ்ரீ.ச.விஜயபாலன் அவர்களுக்கும், சபையின் சேவையில் தங்கள் தேவைகளையும் இணைத்து பங்கேற்று சேவை செய்த சாயி அன்பர்களுக்கும், அனைவருக்கும் சுவாமியின் அருள் ஆசி கிடைக்கும் என்பது திண்ணமே.

தகவல்:-
பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தி களுவாஞ்சிக்குடி

"எனது வீட்டை இரகசியமாக வீடியோ படம் பிடித்தனர்"

சபாநாயகருக்கு ஜே.வி.பி.எம்.பி.புகார்

(கொழும்பு)

தனது வீட்டுக்கு அருகாமையில் ரகசியமாக நடமாடிய சிலர் தனது வீட்டுப்பகுதியை ரகசியமாக வீடியோப்படம் எடுத்திருப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச சபாநாயகரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த நடவடிக்கையானது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரினதுஅடிப்படை உரிமையை மீறுவதாகும் என்று அவர் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய புலனாய்வுப் பிரிவுக்குச் சொந்தமான முச்சக்கர வண்டியிலே சம்மந்தப்பட்டவர்கள் வந்துள்ளதாகவும்அவர் தெரிவித்துள்ளார்.

இதுசம்பந்தமாக கம்பகா பொலிசாருக்கு முறைப்பாடு செய்திருப்பதாகவும் சபாநாயகருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் விமல வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ராஜ்குமாரை மீட்கும் பணியில் நெடுமாறன் மீது குற்றச்சாட்டு; வீரப்பனிடம் செல்ல நெடுமாறன் மறுப்பு

(புதுடில்லி)

சந்தனக் கடத்தல் வீரப்பனால் கர்நாடக நடிகர் ராஜ்குமாரும் அவரது சகாக்களும் கடத்தப்பட்டு நூறு நாட்கள் முடிந்து விட்டன. இந்தியாவின் மிகப் பெரிய கொள்ளைக்காரன் என்றும் யானைத் தந்த, சந்தன மரக் கடத்தல் காரன் என்றும் கூறப்படும் வீரப்பன் இவர்களைக் கடத்தி வைத்துள்ளான்.

இவர்களை விடுதலை செய்வதற்கு பல தரப்புக்களிலிருந்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இவர்களை விடுதலை செய்வதற்கு பல நிபந்தனைகளை வீரப்பன் விதித்தான். பயங்கரவாத சட்டமான தடா, சட்டத்தின் கீழ் சிறையில் இருக்கும் 51 பேரை விடுவிக்க வேண்டும். பிணையில் இருக்கும் மற்றும் 70 பேருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விலக்கிக் கொள்ள வேண்டும் என்பன வீரப்பன் விதித்த நிபந்தனைகளில் முக்கியமானவை.

பிரச்சினைக்குரிய கர்நாடக அரசும் தமிழக அரசும் வீரப்பனின் நிபந்தனைகளை ஏற்று அக்கைதிகளை விடுவிப்பது என்று முடிவெடுத்தன. ஆனால் எட்டு ஆண்டுக்கு முன் கொலை செய்யப்பட்ட இன்ஸ்பெக்டரின் தந்தை அவ்வாறு எடுக்கப்பட்ட முடிவை எதிர்த்து நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார். தற்போது உச்ச நீதிமன்றம் மனுதாரருக்கு எதிராக தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

கடத்தல் சம்பவங்கள், கொலைகளுக்குப் பயந்து பதட்டமடைந்து அதனால் வீரப்பனின் நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொண்டிருக்கின்றன என்று உச்ச நீதிமன்றம் மாநில அரசுகளை விமர்சித்திருக்கின்றது

இந்த தீர்ப்பு வீரப்பனாலும் அவனது சகாக்களாலும் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களுக்கு கிடைத்திருக்கும் மாபெரும் வெற்றி ஒட்டுமொத்தமாக கைதிகளை விடுவிப்பது அரசியல் சட்டத்திற்கு மாறானது என்று அவர்கள் விமர்சித்து வாதாடி வந்தார்கள்.

ஆனால் இந்த தீர்ப்பு மாநில அரசாங்கங்களுக்கு தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த பணயக் கைதி விவகாரத்தை முடிவுக்கு கொண்டுவர அதிகாரிகள் மூன்று மாதங்களுக்கும் மேலாக தினசரி வருகின்றனர். இந்த தீர்ப்புக்கு பின் ராஜ்குமார் விடுவிக்கப்படுபடுவாரா? என்பது நிச்சயம் இல்லாது போல் தோன்றுகிறது.

இதேவேளை சந்தனக் கடத்தல் வீரப்பனை சந்திக்க நெடுமாறன் மறுத்துவிட்டார். நேற்றுக் காலை தமிழ்நாடு சட்டமன்றத்தல் எதிர்கட்சித் தலைவர் சோ.பாலகிருஷ்ணன் தன்னை கடுமையாக பேசியதற்கு நெடுமாறன் கண்டித்து அன்று மாலை அறிக்கை ஒன்றை வெளியிட்டார். தனது மனிதாபிமான முயற்சிகளை கொச்சைப்படுத்தும் பாலகிருஷ்ணனின் கூற்றுக்கள் தனக்கு மிகவும் மன வருத்தம் அளிப்பதாகவும் தனது நேர்மையை சந்தேகிக்கும் பாலகிருஷ்ணனே காட்டிற்குள் சென்று வீரப்பனை சந்தித்து ராஜ்குமாரை விடுவித்து வரட்டும் என்றார். அப்படியானால் நெடுமாறன் தனது முயற்சிகளை கைவிட்டு விட்டாரா என்ற கேள்விக்கு அவர் நேரடியாக பதில் அளிக்க மறுத்து விட்டார்.மற்ற மூன்று தூதுவர்களும் அவரின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து தாங்களுமபோவதில்லை என்று முடிவு செய்திருக்கிறார்கள். ஆனாலும் முயற்சி கைவிடப்பட்டு விட்டதாக கூறமுடியாது.

காலை சட்ட மன்றத்தில் மூப்பனார் காங்கிரஸ் தலைவரும் எதிர்காங்கிரஸ் தலைவருமான பாலகிருஷ்ணன் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் நெடுமாறன் மீண்டும் வீரப்பனை சந்திக்க கூடாது என்று கூறியிருக்கிறார். ஏற்கனவே நெடுமாறன் வீரப்பன் காட்டுக்குள் சென்று தமிழர் கொடிக்கு வணக்கம் தெரிவித்திருக்கிறார். இவர் மறுபடியும் சென்றால் வீரப்பனுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பு அதிகரிக்கப்படும். எனவே பிரிவினை சக்திகள் தமிழ் நாட்டில் தலை தூக்கும். இந்த சூழலில் நெடுமாறன் வீரப்பனை மீண்டும் சந்திக்க அனுமதிக்க கூடாது. மாறாக அவர் கைது செய்யப்பட வேண்டும் என்று பாலகிருஷ்ணன் கூறியிருந்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்தே நெடுமாறன் இப்படியொரு அதிரடி முடிவை எடுத்திருக்கிறார்.

ஆனாலும் கர்நாடகத்தில் வாழும் தமிழர், நலன் கருதி இந்த தூதுவர்கள் நால்வரும் காட்டுக்குள் செல்வார்கள் என்று கருதப்படுகிறது.

இது சம்மந்தமாக அரச தூதுக்குழுவில் பங்குபற்றியுள்ள பாண்டிச் சேரி மனித உரிமை சுகுமாரை கேட்டபோது

கர்நாடகத்தில் வாழும் தமிழ் மக்களின் நலன் கருதியும் தமிழகத்தில் வாழும் கர்நாடக மக்களின் நலன் கருதியும் மனிதாபிமான நீதியில் தான் நாம் இம்முயற்சியை மேற்கொண்டோம். ஆனால் தமிழ்க் கர்நாடக மக்களிடையே இன மோதல்களை ஏற்படுத்தும் முகமாக இந்தப் பிரச்சினையை அரசியல் மயமாக்கி இலாபம் தேட சில அரசியல் வாதிகள் முனைந்திருப்பது வேதனை தருகிறது.

எமது குழுவிற்கு தலைமை வகித்த நெடுமாறனை கொச்சைப்படுத்தி தேச துரோகி என்று தமிழக சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் சோ.பாலகிருஷ்ணன் பேசியிருப்பதை கண்டிக்கின்றோம். ராஜ்குமாரை மீட்கும் பணியை மேற்கொள்வதா இல்லையா என்பதை இனிமேல் பேசித்தான் முடிவு செய்வோம்.

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு எதிர்மறையாக வந்த பின்னும் வீரப்பனுடன் பேசி ஒரு முடிவுக்கு வர முடியுமா?

ராஜ்குமாரை மீட்க நீங்கள் மீண்டும் காட்டுக்குள் சென்றால் ராஜ்குமாரை மீட்க முடியும் என்று நம்புகின்றீர்களா? வீரப்பனிடம் ஏதாவது இலகுத் தன்மை தென்படுகிறதா என்று சுகுமாரை கேட்டபோது

நீதிமன்றத்தின் தீர்ப்பு எப்படியிருக்கும் என்று எதிர்பார்க்காமல்த்தான் எமது நடவடிக்கையில் ஈடுபட்டோம் அடுத்ததாக கடந்த முறை சென்ற போது அவர்களின் கோரிக்கையில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள் என்றாலும் மாநிலங்களுக்கிடையிலான பிரச்சினையை அறிந்தான். அவர்கள் ஒருவரை விடுதலை செய்தார்கள் எனவே ராஜ்குமாரை விடுவிக்க முடியும் என்ற நம்பிக்கை தூதுக் குழுவிற்கு இருக்கிறது என சுகுமார் கூறினார்.

உலக வலம்

தொகுப்பு :- பௌஸி

கடந்த திங்கள் நவம்பர் 6ம் திகதி காசாவில் உள்ள ஷய்பா வைத்தியசாலைக்குச் சென்ற கட்டார் வெளிநாட்டு அமைச்சர் ஷீக் பின் ஜசீம் அல் -தானி தனது உடம்பில் இருந்து இரத்த தானம் செய்தார்.

இத்தாலியில் 877 சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் தடுத்து வைப்பு

(ரோம்)

இத்தாலி நாட்டின் கரையோரக் காவலர்களால் சுமார் 877 சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இத்தாலியின் தென் கிழக்குக் கரையோரத்தில் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டுள்ள துருப்பினர் சட்டவிரோதமாகக் குடியேறிய 877 பேரைத் தடுத்து வைத்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் போது தெரிய வருவதாவது:- கப்பலொன்றில் இத்தாலியை வந்தடைந்த இவர்கள் பயணத்திற்காகத் தலா 4000 அமெரிக்க டொலர் செலுத்தியதாகவும் சுமார் 8 நாட்களாக அவர்கள் பயணம் செய்வதாகவும் தெரிவித்துள்ளனர். மேலும் இக்கப்பலில் 657 ஆண்களும் 87 பெண்களும் 36 சிறுவர்களும் பயணம் செய்துள்ளதுடன் இவர்களுள் அனேகமானோர் குர்திஸ் மக்கள் எனவும் தெரிய வருகிறது. அத்துடன் இவ்வருடத்தினுள் சுமார் 1191 சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறட்டைவிடுவதை தடுக்க தாடை எலும்பு சத்திர சிகிச்சை வெற்றி

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் வசித்து வரும் ஒருவர் தூக்கத்தில் குறட்டையிடுவதைத் தடுப்பதற்காக அவரது தாடை எலும்பை உடைத்துக் கொண்டுள்ளார்.

கடந்த 25 வருடங்களாக, சிங்கப்பூரில் வசித்து வரும் கருணாரகுபதி என்பவர் நித்திரையின்போது சுவாசிக்க முடியாமல் போகும் வியாதி ஒன்றினால் பாதிக்கப்பட்டிருந்தார். இதனால் குறட்டை ஒலிதான் நித்திரையில்க் கேட்கும். இவ்வியாதியால் பாதிக்கப்பட்டிருந்த இவரிற்குச் சில நேரங்களில் சுவாசிக்கக் கூட முடியாமற் போவதும் உண்டு. ஏனெனில் நித்திரையின் போது இவரது நாக்கு சுழன்று சென்று சுவாசப் பாதையை அடைத்து விடுகிறதாம். இதனாலேயே இவரிற்கு இன்னிலை ஏற்படுகிறது.

இறுதியில் இவரிற்கு போதும் போதும் என்று ஆகிவிட்டது. இதனாலேயே இவர் சிகிச்சை பெற விரும்பினார். இந்த சிகிச்சை ஒரு சத்திர சிகிச்சையாக அமைந்தது.

இந்த சத்திர சிகிச்சை தொடர்பாக வைத்தியர்கள் கருத்து வெளியிடுகையில் வடகிழக்கு ஆசியாவில் இவ்வாறான சிகிச்சை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதுவே முதல் தடவை என்று தெரிவித்தனர். இந்த சத்திர சிகிச்சையின்போது, வைத்திய நிபுணர்கள் இவரது மேல் தாடையை உடைத்து சற்று முன்னோக்கித் தள்ளுவதே இச்சத்திர சிகிச்சையாக அமைந்தது. இதனால் இவரது சுவாசப் பாதையை பெரிதாக்குவதே வைத்திய நிபுணர்களின் குறிக்கோளாக இருந்தது.

48 வயதான இவரது தாடை எலும்பு உடைக்கப்பட்டு இரும்புத் தகட்டினாலும், ஊசிகளினாலும் ஆன வடிவமைப்பு ஒன்றில் பொருத்தப்பட்டது. ஏழு மணித்தியாலங்களாகத் தொடர்ந்த இந்த சத்திர சிகிச்சை கடந்த ஜூலை மாதம் நடைபெற்றதாகும்.

இச் சத்திர சகிச்சையினால் அவரது முகம் சற்று மாற்றம் அடைந்திருந்தாலும் குறட்டையிடும் சத்தம் இன்றித் தூங்குவதே மேல் என்று ரகுபதி தெரிவித்துள்ளார்.

வல்லரசின் தலைவர் யார்?

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் ஜனாதிபதி தேர்தலில் யார் வெற்றி பெறப் போகிறார்கள் என்பது இந்த தேர்தலின் பின் தெரியவரும் இனிவரும் நான்கு ஆண்டுக்கு இப்போது இருக்கும் வல்லரசுக்கு யார் தலைமை தாங்கப் போகிறார்கள் என்பதை இது நிர்ணயிக்கும்

காளியம்மன் துணை

உங்கள் அங்கத்தை மங்காத் தங்கத்தில் அலங்கரித்திடும் 22 கரட் நகைகளை

உத்தரவாதத்துடன் உங்கள் மனங் கவரும் டிசைன்களில் மின்னிடும் தங்கத்திற்கு மனம் எண்ணிடட்டும் சரண்யா நகைகளையே!

சரண்யா ஜுவலர்ஸ்

பிரதான வீதி,
களுவாஞ்சிகுடி
தொ.பே. 065-50071

பிறந்த திகதி தரும்யோகம்.

ஜோதிடம் யூலை - 08

யூலை மாதம் 8,17,26ம் திகதிகளில் பிறந்தவர்களின் பலன்கள்

எண் 8.அதன் அதிபதி சனி யூலை 8ல் பிறந்தவர்கள் பதன் ஆதிக்கமும்.17,26ல் பிறந்தவர்கள் சந்திரன் ஆதிக்கமும் பெற்றவர்கள்.

இளமைக்காலங்களில் சிறுசிறு தொல்லைகளை அனுபவிக்கும் நிலை ஏற்படும். 26வயது வரை பிறர்கையையே எதிர்பார்க்கும் நிலையும் ஏற்படும். திருப்தி இல்லாத வாழ்க்கையாகவும் மற்றவர்களுக்குச் செய்யும் உதவியும் பல்ன் தராதநிலையிலேயே அமையும். காதல் விவகாரம் பல தோல்விகளைத் தழுவும். எண்ணங்களும் ஆரம்பத்தில் நிறைவேறாத நிலையாகவும் இருக்கும். இறுதிக்காலத்தில் அமைதியான வாழ்வும் மகிழ்ச்சியும் ஏற்படும். மற்றவர்களுக்காக உழைக்கும் நிலையும் தங்களது உழைப்பால் மற்றவர்கள் பயன் பெறும் நிலையும் ஏற்படும். இருந்தும் இறுதிக்கால வாழ்க்கையில் உயர் நிலை பெறுவீர்கள். செல்வ நிலையில் உயர்வைத் தரும். சனிபகவானின் ஆதிக்கம் அதிகம் உள்ளதால் அனைத்தையும் உணர வைத்தே நன்மை செய்வார். செய்யும் நன்மைகள் நிரந்தரமாகவே அமையும். மத்திய வயதில் இருந்து படிப்படியாக உயர்நிலை பெறுவீர்கள்.

சிலர் ஆன்மீகத்தில் தீவிர ஈடுபாடும் சிலர் நாத்திக வாதியாகவும் இருப்பார்கள். அரசாங்கம் கூட்டத்தாபனம் தனியார் நிறுவனம் இவற்றில் உயர்பதவி கிடைக்கும். ஆசிரியராகவும் எழுத்தாளராகவும் மதகுருவாகவும் பணியாற்று நிலையும் ஏற்படும்.

அதிஷ்டலாபச்சீட்டு சிலருக்கு அதிகலாபத்தையும் சிலருக்கு அதிக நஷ்டத்தையும் கொடுக்கும். அதனால் இதில் ஈடுபடாமல் இருப்பதே நலமாகும். அஜீரணக்கோளாறு. கிட்னி. நுரையீரல் இவைகளில் கோளாறு ஏற்படும். அல்சர் வரலாம் அதனால் வாய்வுப் பதார்த்தத்தை தவிர்க்க வேண்டும். இறுதிக் காலத்தில் கை,கால், மூட்டுக்களில் வீக்கம் வாதநோய் ஏற்படும்.

4,8,13,17,22,26,31 ம் தேதி எந்த ஆண்டு. மாதமானாலும் யோகம் தரும் தேதியாகும். 4-8-13-17-22-26-31-31-40-44-49-53-58-62-67-71-80ம் வயதுகளில் வாழ்க்கையில் மிகவும் முக்கியமான நிகழ்ச்சிகள் நடை பெறும்.

1-4-10-13-19-22-28-31 ம் தேதிகளில் பிறந்தவர்களுடன் ஏற்படும் உறவு நல்லுறவாகவும் வாழ்க்கைத் துணையும் இதே எண்ணில் அமையுமானால் இல்லறம் நல்லறமாக அமையும். வர்ணம்-மஞ்சள் நிறமே இவர்களுக்கு சோபை அளிக்கக் கூடியது. ஆழ்ந்த பச்சையும் நீலமும் நன்மை தரக் கூடியன. இரத்தினம்-நீலக்கல் BLUE SAPPHIRE இதன் கடினத் தன்மை 9. ஒப்பிடுதித 4.06. அலுமினியா. இரும்பு. ஆக்ஸைடு. சிலிக்கா இதில் கலந்துள்ளது. குற்றமற்ற இலட்சணங்கள் பொருந்திய நீலக்கல் அணிவதால் நல்ல அதிர்ஷ்டம் உண்டாகும். அத்தோடு முக்கு வாதம், குஷ்டம், தோல்வியாதிகள் ஈரலில் ஏற்படும் சகல நோய்களையும் கட்டுப்படுத்தும் தன்மை கொண்டது.

வே.தவராசா

மலசலகூட 'வீடியோ' கமரா விசாரணை தொடங்கியது

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் மலசல கூடத்தில் வீடியோ படப் பிடிப்பு கமராவை பொருத்தியவர் சம்பந்தமான விசாரணைகளை பொலிஸாரும் குற்றத்தடுப்பு பிரிவினரும் தனித்தனியே நடத்த ஆரம்பித்துள்ளனர்.

மேலும் பல்கலைக்கழக நிருவாக உபகுழுவும் இந்த விவகாரம் தொடர்பாக விசாரணையை ஆரம்பித்துள்ளதாக பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

இதே சமயம் மலசலகூடத்தில் பொருத்தப்பட்டு கைப்பற்றப்பட்ட வீடியோகமரா பல்கலைக்கழக செயற்குழுவிற்கு சொந்தமானது என்று விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது. ஆனால் என்ன காரணத்திற்காக பொருத்தப்பட்டது என்று கண்டு பிடிக்கவில்லை.

மலையக கலவரம் தொடர்பாக வழக்குத் தொடர பரிசீலனை

(கொழும்பு)

பிரந்துலுவெவ சம்பவத்தைத் தொடர்ந்து மலையகப் பகுதிகளில் ஏற்பட்ட கலவரங்கள் தொடர்பாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்போருக்கு எதிராக வழக்கு தாக்குதல் செய்வது பற்றி சட்டமா அதிபரிடம் ஆலோசனை செய்யப்படும். என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

75பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியமை தாக்குதல் நடத்தியமை அமைதியை குலைத்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. இவர்களில் மிருந்து ஏற்கனவே வாக்கு மூலங்கள் பெறப்பட்டுள்ளதாம்.

திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் மிக விரைவில் கும்பாபிஷேக வைபவம் நடைபெற இருக்கின்றது.

புத்தகக் கண்காட்சி

(நமது நிருபர்)

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் நூலகத்திலுள்ள புத்தகங்கள் ஒலி,ஒளி பேழைகள்கண்காட்சி எதிர்வரும் 11ம், 12ம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் 5 மணி வரை சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் 46/02. பழைய வாடி வீட்டுத் தெரு, மட்டக்களப்பில் இல் நடை பெறவுள்ளது.

அத்துடன் பெண்கள் தொடர்பான விவரண வீடியோக்கள் கண்காட்சியில் காண்பிக்கப்படவுள்ளது.

சமாதானத்தின்.....

(6ம் பக்கத் தொடர்ச்சி...)

பிரபாகரன் அவரது செயற்பாடுகளான இராணுவத் தினரின் எண்ணிக்கையை அதிகரித்தல்.சிங்கள பௌத்த மேலாதிக்க ஆளுமை முதலியவை சமாதானத்தின் பின்னடைவுகள் என்றார். இப்பொழுதும் புலிகள் பேச்சுவார்த்தைகளுக்கு தயாராகவே உள்ளார்கள். நம்பத் தகுந்த முறையில் ஓர் நீதியான பேச்சுவார்த்தைகள் அமையுமெனில்.

இது சமாதான பேச்சுக்களுக்கு ஓர் இன்றியமையாத அடித்தளமாகும்.

நம்பிக்கையானது பரஸ்பர பூரண நம்பத்தகுந் தன்மையாலும் ஐக்கியமான செயற்பாடினாலுமே கட்டப்படுகிறது

செய்திச் சுருக்கம்

4முக்கிய விடயங்கள் கோரி கடிதம்:-

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் அனர்த்தத்தையடுத்து அங்கு தற்போது உள்ளவர்களின் மனநிலைமையை கண்டறிய ஒரு உளவியல் மருத்துவ நிபுணர் குழு அனுப்பப்பட வேண்டும் எனவும் மேலும் சம்பவதினம் அங்கு இருந்தவர்கள் பற்றிய விபரம் உயிரிழந்த அல்லது பாதிக்கப்பட்டவர்கள். தப்பியவர்கள் மற்றும் முகாம் பொறுப்பதிகாரிகளின் நிலைமைகளைக் கண்டறிய வேண்டும் போன்ற 4 முக்கிய விடயங்கள் அடங்கலான கடிதம் ஒன்றை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் மனித உரிமைகள் நிலையம் அனுப்பி வைத்துள்ளது.

பொறிவெடியில் காலை இழந்த விமானப்படை வீரர்

கடந்த செவ்வாய்க் கிழமையன்று வலைஞர்மடம் விமான நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த முட்கம்பி வேலிக்கு அருகாமையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த பொறிவெடியில் பஞ்சு நாயக்க (24 வயது) எனும் விமானப்படை வீரர் அவரது காலினை இழந்துள்ளார். தற்போது மட்டக்களப்பு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவரும் இவர். மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

இவையே வாக்கு கிழக்கில் நிலைமையை வழமைக்குத் திருப்புவதில் வெற்றியளிக்கும்.

தொடரும்.....

நோர்வேயின்..... (6ம் பக்கத் தொடர்ச்சி)

வேறு தேர்தல் காலங்களில் இனவாதிகளிடம் புலிகள் யுத்தத்தின் மூலமே வெற்றி கண்டு சமாதானம் ஏற்படுத்தப்போவதாகவும் எதிர்கட்சியையும் அவர்களின் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவையும் அரசியல் வரம்புகளையும் தாண்டி தொடர்புபடுத்தி வாக்கு வேட்டை ஆடியது.

சமாதான முயற்சிகளை பெரும்பாலான மக்கள் என்று அனைத்தின மக்களும் விடுதலைப் புலிகளுடன் பேசி ஒரு நிரந்தர தீர்வை காணாமலே விரும்புகின்றனர்.

இதன் காரணமாகவே நோர்வே குழு புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்தித்த விடையத்தை பலரும் ,பல சந்தர்ப்பங்களில் பாராட்டி வரவேற்றுள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் யூ.எல்.ஹனீபா மருதூர்கனி தமது கட்சியின் பிரபா - நோர்வே குழுவின் சந்திப்பு தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தமது தலைவர் மறைந்த அமைச்சர் எம்.எச்.எம்.அஸ்ரப்பின் நிலைப்பாடு கூட விடுதலைப்புலிகளுடன் பேசாத எந்த தீர்வும் நிரந்தர சமாதானத்தைக் கொண்டு வராது என்றும் நோர்வேயின் முயற்சி ஒரு முக்கியமான சந்தர்ப்பத்தை நோர்வே ஏற்படுத்தித் தர சந்தர்ப்பம் என்றும் தாமும் கூட விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திக்கும் என்றும் அறிக்கையில் வெளியிட்டிருந்தார்.

இதுபோல பல மனிதாபிமான அமைப்புக்களும் சமாதானத்தை விரும்பும் பல்வேறுபட்ட நிறுவனங்களும் அமைப்புக்களும் இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதரகங்களும் இக்கருத்தையே பிரதிபலிப்பதாய் தமது எண்ணங்களையும் விருப்பங்களையும் வெளியிட்டிருந்தன.

ஆனால், இனத்துவேச ரீதியில் செயல்படும் ஒரு சிலர் மட்டும் நோர்வையின் சமாதான முயற்சியை கொச்சைப்படுத்துவதாய் தமது சுய நலப் போக்கை வெளிக்காட்டிக் கொண்டிருக்கின்றனர்.

இதை எல்லாவற்றையும் விட நோர்வேயின் சமாதான முயற்சிக்குரிய பேச்சுக்களை கொச்சைப்படுத்துவதால் சந்திரிக்கா அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் அதாவது யுத்தத்துக்காக பிற நாடுகளிடம் கையேந்தி வருவது அமைகிறது.

நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள இலங்கை கடற்படை தளபதி ழவஸ் அட்மிரல் சிசில் திசேரா இந்திய முப்படைகளினது உயர் அதிகாரிகளை சந்தித்து உதவி கோரியுள்ளமை வேதனை அளிக்கிறது.

அதே சமயம் நோர்வையின் முயற்சி பற்றி பிரபாகரனின் சந்திப்பு போன்ற விடயங்கள் பற்றியும் கூட்டப்பட விருந்த விசேட அமைச்சரவைக்கூட்டம் ரத்துச் செய்யப்பட்டு பிரதமர் ரணில் விக்கிரமநாயக்க பௌத்த பீடாதிபதிகளுடன் ஆலோசனை நடத்த இருப்பதாகவும் செய்திகள் வந்துள்ளன.

இவை எல்லாவற்றையும் எடுத்துப் பார்க்கும் போது அரசாங்கத்தின் நாடகங்கள் தெளிவாகின்றதை உணர முடிகிறது. அப்பாவி உயிர்களை பலியெடுத்துக் கொண்டிருக்கும் யுத்தத்திற்கு முடிவு என்பது அரசாங்கம் நாடகமாடாமல் நோர்வேயின் உண்மையான போக்குக்கு ஒத்துழைப்பதுதான்.

இலங்கையில் எந்த ஆட்சி அமைத்தாலும் யுத்தத்தில் இலங்கைக்கு விடிவு வரும் என்பது வெறும் பகல் கனவு மட்டுமல்ல எவராலும் எண்ணிக் கூட பார்க்க முடியாது. எமது பிரதமர் பீற்றிக் கொள்வது போல் எதனையும் சாதித்துவிட முடியாது. யுத்தத்தில் ஆயிரக்கணக்கில் பலியாகிக் கொண்டிருப்பது தமிழ் இளைஞர் சமூகம் மட்டுமல்ல அதைவிடவும் கூடுதலாய் அநியாயமாய் சிங்கள இளைஞர் சந்ததியும்தான்.

விதண்டாவாதம் செய்து கொண்டிருக்கும் அரசியல் வாதிகளுமல்ல. அவர்களின் பிள்ளைகளுமல்ல என்பதை பிரதமரும் அவரது அரசாங்கமும் புரிந்து கொள்ள வேண்டும்

நோர்வே சமாதானகுழு வேலுப்பிள்ளை பிரபாகரனை மட்டுமல்ல சந்தித்தது அவர்கள் வன்னிப் பிரதேசத்து நிலையையும் மக்களின் வாழ்க்கைச் சூழலையும் அவர்கள் படும் துன்ப துயரங்களையும் யுத்தத்தால் அகதிகளாக்கப்பட்ட அப்பாவிகளையும் தான். அவர்களின் உண்மை நிலையை நேரடியாக கண்ட அவர்கள் சிறிலங்கா அரசின் போக்கை ஆதரிப்பார்கள் என்பது மெய்ப்படாது.

அதை விடவும். நோர்வே நாடு உலகிலேயே சமாதானமான அமைதியான நிலையிலுள்ள நாடுகளில் முதல் இடத்தில் வகிப்பது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனவே நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு உண்மையான ஆதரவை வழங்கி புலிகளுடன் பேச அரசாங்கம் முன்வர வேண்டும்.

பௌஸியா சிவராஜா

வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத் துறை அமைச்சு முன்பள்ளி கல்வி பிரிவு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை வழங்கி வருகின்றது. திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி முருகுப்பிள்ளை நடன அசைவு பற்றிய பயிற்சிகள் வழங்குவதை முதலாவது படத்திலும், ஆசிரியைகள் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

படம்: திருமலை நிருபர் எஸ்.எஸ்.குமார்

குடிசனவீட்டு தொகை மதிப்பு வேலைகள் நிறைவு அடுத்த வருடம் கணக்கெடுப்பு

(லோட்டமானி நிருபர்)

இலங்கையில் தேசிய மட்டத்தில் அடுத்த வருடம் நடாத்தப்படவிருக்கும் குடிசன வீடு வசதித் தொகைமதிப்புக்கான பெரும் பணி வேலைகள் பூர்த்தியாகி இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதாக புள்ளிவிபரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் வ.ஜீவ பிள்ளை நாணயக்கார தெரிவித்துள்ளார்.

திட்டமிட்டபடி 2001 ஆம் இத்தொகை மதிப்பினை நடாத்துவதற்கான அவசியமான செயற்பாடுகளை தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் எடுத்து வருகின்றது.

இத்தொகைமதிப்பின் முதற் கட்ட வேலையாக தரம்பார்த்தல் நடவடிக்கைகளையும், நகரப்புறங்களுக்கான வட்டாரங்களின் பட்டியல்களையும், பெருந் தோட்டங்களின் பட்டியல்களையும் தயாரிக்கும் வேலைகள் முடிவடைந்ததையடுத்து நகரப்குதிகளில் வட்டாரங்களின் வரைபடத்தையும், கிராமப்பகுதிகளிலும் பெருந்தோட்டப்பகுதிகளிலும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் வரைபடங்களையும் தயாரிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, பெரும்பாலான மாவட்டங்களில் முடிவடைந்துள்ளதாக அறிய முடிகின்றது.

இதேவேளை படம் வரைதல் வேலைகள் முடிவுற்ற மாவட்டங்களில் தற்போது வீடுகளை கணக்கெடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் (முன் நிரப்படுத்தல் வேலை) சில மாவட்டங்களில் இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது.

''ஆயுதங்கள் காப்பதற்கே அழிப்பதற்கல்ல''

நிமலன் கொலை பற்றி மட்க்களப்பு ஈ.பி.ஆர்.எல். எஃகினை விடுத்துள்ள செய்தி இது.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமலன் சௌந்தரநாயகத்தை படுகொலை செய்த சம்பவத்தை மிக வன்மையாக கண்டிக்கின்றோம்.

தமிழ் சமூகத்தை வழி நடத்தும் ஆற்றலுள்ளவர்களை கொன்றொழிப்பதின் மூலம் தமிழ் மக்களின் பலமிக்க குரலை நிறுத்தி விட முடியாது என்பதை இக் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்வார்களென நம்புகிறோம்.

ஆயுதங்கள் மக்களை காப்பதற்கேயன்றி மக்களை அழிப்பதற்கல்ல என்ற உண்மையை அறியாமல் இக்கோரக் கொலையை செய்தவர்களை யாராக இருந்தாலும் இனம் கண்டு தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும்.

இக்கொலைக்குப் பின்னாலிருந்த சக்திகள் அம்பலப்படுத்தப்படுவதோடு துயரம் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோன்.

அசோகன், காகபதிநடராஜா ஆகியோர் பிரதி வழங்க முறையே வொ.தவிராஜா பாலசுகுமார் க.தங்கேஸ்வரி, சாந்தி முகைதீன், ஜெயந்தி தனையசிங்கம் ஆகியோர் பிரதிகள் பெறவுள்ளனர்.

முடிவில் திரேசா பதிலுரை வழங்க ச.மணிசேகரன் நன்றியுரை நிகழ்த்தினார்.

சாரணிய ஆசிரியர்களின் ஒன்றுகூடல்

அகிலவிரிவு கல்முனை பிரதேச ஆசிரியர்களின் ஒன்றுகூடல் கல்முனை [illegible] அண்மையில் [illegible] அலுவலகத்தில் வித்தியாலயத்தில் உதவிமாவட்ட சாரணிய ஆணையாளர் எம்.ஐ.எம். முஸ்தபா தலைமையில் இடம்பெற்றது. இதில் 30 பாடசாலைகளைச் சேர்ந்த சாரணிய ஆசிரியர்கள் பங்குபற்றினர்.

எதிர்வரும் 10ம், 14ம் திகதிகளில் சாரணிய ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி ஒன்றை கல்முனையில் நடாத்துவது என இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. உதவி மாவட்ட சாரணிய ஆணையாளர்களான ஐ.எல்.மஜீத், எம்.வேலாயுதம், உட்பட பலரும் இதில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

உடற்கல்வி செயல் முறைப்பரீட்சை

(முபா)

அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையைச் சேர்ந்த இறுதி வரு பயிற்சி ஆசிரியர்களுக்கான உடற்கல்வி செயல் முறை பரீட்சை அண்மையில் இரண்டு நாட்கள் கலாசாலை மைதானத்தில் இடம்பெற்றது. ஆரம்ப நெறி, கணித நெறி, வர்த்தக நெறி, கலைவினை நெறி, இஸ்லாம் நெறி, விஞ்ஞான நெறி, ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 90 ஆசிரியர்கள் இப்பரீட்சைக்கு தோற்றினர்.

உடற்கல்வி ஆசிரியர்களான எம்.எ.எம்.முஸ்தபா, எம்.எச். எம்.மன்சூர், உடற்கல்வி ஆசிரியை யூ.நஸீமா ஆகியோர் இப்பரீட்சை களை நடாத்தினர்.

நாயகம் வ.ஜீவ பிள்ளை நாணயக்கார தெரிவித்துள்ளார்.

திட்டமிட்டபடி 2001 ஆம் இத்தொகை மதிப்பினை நடாத்துவதற்கான அவசியமான செயற்பாடுகளை தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் எடுத்து வருகின்றது.

இத்தொகைமதிப்பின் முதற் கட்ட வேலையாக தரம்பார்த்தல் நடவடிக்கைகளையும், நகரப்புறங்களுக்கான வட்டாரங்களின் பட்டியல்களையும், பெருந் தோட்டங்களின் பட்டியல்களையும் தயாரிக்கும் வேலைகள் முடிவடைந்ததையடுத்து நகரப்குதிகளில் வட்டாரங்களின் வரைபடத்தையும், கிராமப்பகுதிகளிலும் பெருந்தோட்டப்பகுதிகளிலும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் வரைபடங்களையும் தயாரிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, பெரும்பாலான மாவட்டங்களில் முடிவடைந்துள்ளதாக அறிய முடிகின்றது.

இதேவேளை படம் வரைதல் வேலைகள் முடிவுற்ற மாவட்டங்களில் தற்போது வீடுகளை கணக்கெடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் (முன் நிரப்படுத்தல் வேலை) சில மாவட்டங்களில் இம்மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது.

இத் தொகை மதிப்பு வேலைகள் சுமார் 2 இலட்சம் ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ள, அதே வேளையில் தொண்டர்களாக க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றியவர்கள் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட விருக்கின்றார்கள்.

இலங்கையில் முதன் முதலாக 1871 ஆம் அண்டு சனத்தொகை வீடு வசதித் தொகை மதிப்பு எடுக்கப்பட்டது. இறுதியாக 1981 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட தன் பின் 10 வருடங்களுக்குப் பின் 1991 ஆம் ஆண்டு எடுக்கப்பட வேண்டிய கணக்கெடுப்பு வடக்கு கிழக்கில் நிலவிய போர்ச் சூழ்நிலை காரணமாக நடாத்தப்படவில்லை.

இக்கணக்கெடுப்பு இலங்கையின் வரலாற்றில் 13வது தொகை மதிப்பு என்பதுதான் 21 ஆம் நூற்றாண்டில் முதலாவது தொகை மதிப்புமாகும். அத்தோடு குடிசன வீட்டு வசதித் தொகை மதிப்பின் சரித்திரத்திலே முதற்தடவையாக 2001 இல் நடைபெற விருக்கும் இத் தொகை மதிப்பில் நகரப் பிரிவுக்கான தரவுகள் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் வெளியிடப்பட உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

தொழில் வழிகாட்டல் வாரம்

(மருதமுனை நிருபர் நஸீம் எம்.பதுர்தீன்)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நடாத்தப்படுவரும் இளைஞர்?, யுவதிகளுக்கான தொழில் வழிகாட்டல் வாரம் 06.ஆந் திகதி தொடக்கம் 12.ஆந் திக்தி வரை நடை பெற்று வருகிறது. இந்த வகையில் கல்முனை பிரதேச இளைஞர் சேரைவ அதிகாரி எம்.ரி.எம்.ஸாறூன் தலைமையில் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி ஆராதனை மண்டபத்தில் 7ம் திகதி நடை பெற்றது.

இவ்விழாவில் க.பொ.த. (உ/த) மாணவர்களும், மருதமுனையிலுள்ள 15 ற்கு மேற்பட்ட இளைஞர் கழகங்களில் அங்கம் வகிக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர்.

இவ்விழாவிற்கு அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி அல்ஹாஜ் எஸ்.எம்.ஏ. காதர், கல்விக்கல்லூரி முன்னாள் பீடாதிபதி அல்ஹாஜ் ஏ.ஆர்.ஏ. அஸீஸ்.அல்மனார் மத்திய கல்லூரி அதிபர் ஏ.எல்.மீராமுகைதீன் உட்பட பல்கலைக்கழக மாணவர்களும் கல்நது கொண்டனர்.

இக்கருத்தரங்கில் இளைஞர்.? யுவதிகள் எவ்விதம் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வது பற்றி உரை நிகழ்த்தியதோடு ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன.

தாக்குதல் முறியடிப்பு?

(மட்டக்களப்பு)

அம்பாறை பட்டிருப்புப் பாலம் மீது மேற்கொள்ளப்பட்ட மோட்டார் தாக்குதலை விஷேட அதிரப்படையினர் முறியடித்துள்ளனர் என அறிவிக்கப்படுகிறது. முன்தினம் இரவு இந்த தாக்குதல் நடத்தப்பட்டது பாதுகாப்பு படையினர் திருப்பித் தாக்கிய சமயம் விடுதலைப்புலிகள் தப்பிச் சென்று விட்டார்கள் என்றும் படைவட்டாரங்கள் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் விடுவிக்கப்பட்ட பகுதியையும் விடுவிக்கப்படாத பகுதியையும் இந்த பாலம் பிரித்துவைத்திருக்கிறது.

சிறுகதைத் தொகுதி அறிமுகவிழா

(நமது நிருபர்)

திரேசாவின் ''கலாபதி'' சிறுகதைத் தொகுதி அறிமுக விழா எதிர்வரும் 12 ஆந்திகதி ஞாயிறு காலை 10.00 மணிக்கு மட்.அரசினர் ஆசிரியர் கலாசாலையில் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் சி.ஜெயசிங்கம் தலைமையில் நடை பெறவுள்ளது.

நூல் அறிமுகவுரையை கலாநிதி செ.யோகராஜா நிகழ்த்த அம்ரிதா பெம், விஜயலெட்சுமி சேகர், வி.கௌரிபாலன் ஆகியோர் கருத்துரைகள் வழங்கவுள்ளனர்.

நூல் வெளியீட்டில் அன்பு மணி, நூர்பிஷ் லன்னீனா பிரான்சிஸ் போர்ஜ் சந்திரசேகரன், மண்டூர் அசோகன், காகபதிநடராஜா ஆகியோர் பிரதி வழங்க முறையே வொ.தவிராஜா பாலசுகுமார் க.தங்கேஸ்வரி, சாந்தி முகைதீன், ஜெயந்தி தனையசிங்கம் ஆகியோர் பிரதிகள் பெறவுள்ளனர்.

முடிவில் திரேசா பதிலுரை வழங்க ச.மணிசேகரன் நன்றியுரை நிகழ்த்தினார்.

உள்வாரி பரீட்சை ஆரம்பம்

(முபா)

அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரி இரண்டாம் வருட பயிற்சி ஆசிரியர்களுக்கான உள்வாரி பரீட்சையில் தற்போது இடம் பெற்று வருகின்றன. பத்து தினங்கள் இடம்பெறும். இப்பரீட்சையில் 100 பயிற்சி ஆசிரியர்கள் தோற்றுகின்றனர். இப்பரீட்சை முடிவடைந்ததும் வெளிவாரிப்பரீட்சை ஆரம்பமாகும். இதைத் தொடர்ந்து இவ்வாசிரியர்கள் கட்டுப்பயிற்சிக்காக பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர். கட்டுருபயிற்சி ஒரு வருட காலமாகும்.

2001ம் ஆண்டு ஜனவரியில் பயிற்சிக்காக சேர்த்துக் கொள்ளப்பட விருப்பதாக அறியப்படுகின்றது. இவர்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்கனவே கோரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. விரைவில் இவர்களுக்கான நேர்முகப்பரீட்சை இடம்பெறும்.

வன்னியில் சமாதானத்தின் ஒளிக்கீற்று

நேற்றைய தினக்கதிர் இதழின் இதேபக்கத்தில் வெளியான கட்டுரையிலும் அதன் தொடர்ச்சியான இப் பகுதியிலும் நோர்வே பிரதிநிதிகளின் இலங்கையில் சமாதானத்திற்கான அடிப்படை நோக்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளின் உண்மை நிலையும் அரசின் போக்கும் தெள்ளத் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

கருத்தரங்கு

இது உங்கள் பக்கம்

மீண்டும் கருத்தரங்கு இப்பகுதியில் ஆரம்பமாகியிருக்கிறது. தேர்தலுக்குப் பின் மக்கள் பிரதிநிதிகளிடம் எதிர் பார்க்கும் தேவைகள், அரசியல் நிலைமை நோர்வேயின் சமாதான முயற்சிகள் போன்ற பல விஷயங்களில் வாசக நேயர்கள் தங்கள் கருத்துக்களை இப்பகுதியில் வெளியிட வாய்ப்பளித்திருக்கிறோம். இனி இது உங்கள் பக்கம்.

ஆசிரியர்

(நேற்றைய தொடர்ச்சி)

சமாதானத்தின் கதவை மூடியது யார்?

வன்னி நிலப்பரப்பில் நோர்வே பிரதிநிதிகள் வந்திறங்கியதும் அவர்கள் முதலாவதாக அப்பிரதேசத்தின் சமய, சமூக, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையே முதலில் சந்தித்தனர். அதன் பின்பே புலிகளுடனான கலந்துரையாடலுக்கு சென்றனர்.

அங்கு இரு கலந்துரையாடல் களை அவர்கள் ஒழுங்கு செய்தி ருந்தார்கள். அதில் ஒன்று L.T.T.E தலைவர் பிரபாகரனுடனான 2 மணித்தியாலய கலந்துரையாடலாகும். விடுதலைப் புலிகளின் தலைவர் தனது இரகசியமான இடத்திலிருந்து புறப்பட்டு சந்திப்பு நிகழ இருந்த இடத்திற்கு வந்தார். L.T.T.E யினரின் அரசியல் பிரிவுத் தலைவர் எஸ்.பி.தமிழ்ச்செல்வனும் அவரோடு இணைந்து வருகை தந்திருந்தார். இன்னுமொரு சிரேஷ்ட உறுப் பினரான சங்கர் என்று அழைக கப்படும் சொர்ணலி ங்கமும் மொழிபெயர்ப்பாளராக அங்கு சமுகமளித்திருந்தார். முன்னாள் மன்னார் யாழ் சேனா திபதி கனகசபாபதி ஹரிச்சந்திரன் எனும் ராதாவின் பெயரில் இயங்கும் விமான எதிர்ப்புப் படை யணிக்கு பொறுப் பாளராக சங்கர் இருக்கின்றார். என்பதும் குறிப்பிட த்தக்கது. இந்தப் படை யணியினரால் விமான எதிர்ப்பு ஆட்டிலறிகள் ராடர் கட்டுப்பாட்டுடன் கூடிய ஆயுதமான இஸற்.எஸ்.யு-23-4, ஒரு 23 மில்லிமீற்றர் விட்டங்கொண்ட 4 சுடுகுழல்களை உடைய பீரங்கி முதலியவைகளைக் கொண்ட ஆயுதசாலை மனதில் பதியத்தக்க வகையில் சம்பாதித்து வைக்கப் பட்டுள்ளது. இவைகளாலேயே அண்மையில் எம்.ஐ.24 ஹெலி ஹொப்பர்கள் தாங்கி அழிக்கப்பட்டி ருந்தன.

புலிகளுடனான இரண்டாவது கலந்துரையாடல் புலிகளின் சில அரசியல் பிரிவு உறுப்பினர்களுடன் நடந்தது. அதில் அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச்செல்வன் பிரதித் தலைவர் கரிகாலன் ஆகியோர் பிரசன்னமாயிருந்தார்கள். இக் கலந்துரையாடல் 3 மணிநேரம் நீடித்தது. இதில் திரு.பிரபாகரன் கலந்து கொள்ள வில்லை.

தமிழர்களின் துன்பங்களும் வேதனைகளும் அங்கு வெள்ளிடை மலையாக எதிரிந்தன.

தற்போதைய நிலமையினை நோர்வே பிரதிநிதிகளுக்கு வெளிச் சம் போட்டுக்காட்ட புலிகள் இந்தக் கலந்துரையாடலை வெகுவாகப் பயன்படுத்திக் கொண்டனர். வன்னி யில் பொருளாதாரத் தடை உத்தரவாலும் பொருட்களை எடுத் துக் செல்லல் தொடர்பான கட்டுப் பாட்டாலும் தமிழர்கள் படும் துன்பங்களும் வேதனைகளும் அங்கு வெள்ளிடை மலையாகத் தெரிந்தன. இந்த ஒன்று கூடலும் மற்றைய அரசசார்பற்ற பிரதி நிதிகளோடும் சமய பிரமுகர்க யோடும் சமூகத்தோடும் நடந்த கலந்துரையாடல்களிலும் இருந்து நோர்வே பிரதிநிதிகள் யுத்த காலங்களில் வன்னிமக்களின் துன்பங்களை மிகத் தெளிவாக விளங்கிக் கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் நோர்வே பிரதிநிதிகளும் சம்பாஷித்தது ஓர் முக்கியமானதும் பயன்படக்கூடியது மான விடயமாகும். இறுதியாக ஜனவரி மாதம் 1995 ம் ஆண்டு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் யுத்தநிறுத்தக் கண்காணிப்பின் நிமித்தம் பிரபாகரனை சந்தித்தனர். அப் பிரதிநிதிகளில் ஒரு கனேடியரும் நோர்வே, நெதர்லாந்து நாடுகளில் இருந்து தலா இருவரும் கலந்து கொண்டார்கள். கடைசியாக சந்தித்த இலங்கை அரசு சார்பான பிரமுகர் முன்னாள் ஐ.தே.கட்சி அமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீட் ஆவார். இவர் யூன் மாதம் 1990 ஆண்டு தலைவர் பிரபாகரனை சந்தித்தார். இந்திய நாட்டின் குடிமகனும் இலங்கைக்கான இந்தியத் தூதுவருமான ஜே.என்.டிஸ்சிற் உம்அவரது அரசியல் காரிய தரிசி ஹர்தீப் சிங் பூரியும் திரு. பிரபா கரனை செப்ரெம்பர் மாதம் 1987ல் சந்தித்தனர். இராணுவ அதிகாரி களான ஹரிகிரரட் சிங்கும் மற்றும் பிரிகேடியர் பேர்டினன்டிஸ்ம் பிரபாகரனை ஒக்டோபர் மாதம் 1987ம் ஆண்டு சந்தித்தனர். இதில் நிச்சயமான உண்மை என்ன வெனில் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் மிகவும் முக்கியமான விடயங்களுக்கு மட்டுமே தான் முன்னின்று வெளிநாட்டு பிரதி நிதிகளை சந்தித்துள்ளார் இதனடிப்படையில் நோர்வே பிரதிநிதிகளுடனான பேச்சும் சமாதானம் தொடர்பாக முக்கியத் துவம் வாய்ந்ததே. நோர்வே பிரதிநிதிகளுடனான பிரபாகரனின் பேச்சு கைமீறிப்போன சமாதானப் பேச்சுக்களையும் அல்லது விடப் பட்ட தவறுகளையும் நீக்கி சமாதா னத்தை சாத்தியமாக்குவது தொடர் பாகவே இருந்தது. இலங்கையின் ஆதிக் கத்திற்குட்பட்ட பகுதியின் சீரிய நிலையை குறிக்காமலும் தமிழர்களின் நியாயமான ஆசை களை உணர்ந்து கொண்டும் நோர்வே தனது, நிலையிலிருந்து இப்பாரிய கடமையை மேற்கொள்வதையிட்டு அவர் மெச்சினார்.

எந்த சமாதான தீர்வும் தமிழர்களின் அபிலாசைகளை திருப்திப்படுத்த வேண்டும்.

L.T.T.E ன் தலைவர் தான் சமா தானத்தை ஏற்படுத்த சாத்தியங் கள் உள்ளதாயின் அதற்கு எதிராக எதனையும் செய்ய மாட்டேன் என வலியுறுத்தி கூறினார். எந்த சமாதானத் தீர்வும் தமிழ் மக்களின் அபிலாசைகளை திருப்திப்படுத்தும் வகையில் அமைய வேண்டும். அது நேர்மையானதாகவும் திடமான தாகவும் இருக்க வேண்டும். சிங்கள சமூகம் தனது முயற்சிகளில் தோல்வியடைந்து ஓர் உடன் பாட்டிற்கு வரும் போது மேற்குறிப் பிட்ட அனைத்து விடயங்களையும் எதிர் கொள்ள வேண்டிவரும் என அவர் கூறினார். மேற் குறிப்பிட்டவைகளுக்கு குறைந்த எந்த சலுகைகளையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டோம் என அவர் கூறினார். ஆயினும் L.T.T.E எப்போதும் ஓர் சாத்தியமான உடன் பாடினை ஆராய்ந்து கண்டு பிடிக்கவே ஆயத்தமாக உள்ளது.

தமிழில் – ரூபன்

திரு.பிரபாகரன் தனக்கும் சந்திரிக்காவின் அரசிற்கும் இடையிலான கடந்த கால அனுபவங்களை திறந்த மனத்து டன் உறுதியாக தெரிவித்தார். அவர் கடந்த கால சமாதானப் பேச்சுக்கள் உடைந்து போனதற்கு அமைந் திருந்த காரணங்களைப் பற்றியும் கூறினார். (நோர்வே பிரதிநிதிகள் அண்மையில் அன்ரன் பாலசிங் கத்தினால் எழுதப்பட்ட புத்தகத்தில் குறிப்பிட்டிருந்த சமாதானப் பேச்சு வார்த்தைகள் தோல்லியடைந்த தற்கான காரணங்களை மறந்திருக்க மாட்டார்கள்)

பின்பு பிரபாகரன் சமாதான பேச்சுவார்த்தை மீண்டும் தொடங்குவதிலுள்ள இரு பிரதான முட்டுக்கட்டைகளைப் பற்றி விள க்கமளித்தார். முதலாவதாக L.T.T.E யினரது முன்னேற்றமானது ஜனாதிபதி சந்திரிக்காவிற்கு ஓர் பிடிவாதமான விரோதத்தினை வளர்த்து சமாதானத்தை வளர்க்க விடாமல் தடுக்கும். இரண்டாவது சமாதான பேச்சுவார்த்தைக்குரிய இன்பகரமான சூழ்நிலை இல்லா மை. தமிழ் பிரதேசங்களின் நில மைகள் வழமைக்குத் திரும்புதலே முக்கிய விடயமாகும் என அவர் தெரிவித்தார்.

பின் L.T.T.E தலைவர் இவ்விரு விடயங்கள் பற்றியும் விபரித்தார். சந்திரிக்காவினால் சமாதான பேச்சுவார்த்தைகளின் பொது விடப்பட்ட கவலையீன ங்களை சரியாக கணித்துச் சொன்னார். அவர் சமாதானத்தின் கதவுகளை அடைத்தவர். "சந்தி ரிக்கா குமாரதுங்க அவர்களே என தர்க்க ரீதியாக நிருபிக்க விளைந் தார். சந்திரிக்கா எப்படி சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு எதிராக செயற்பட்டார் என்பதன்ன நிரல்படுத்தினார். இது அவரது

(4ம் பக்கம் பார்க்க)

நோர்வேயின் சமாதான முயற்சிக்கு அரசு ஒத்துழைப்புத் தரவேண்டும்

இலங்கை அரசாங்கத்தின் நாடகங்களை பார்க்கும் போது சிரிப்பதற்கும் சிரமமாக உள்ளது. அழுவதற்கும் சிரமமாக உள்ளது.

இலங்கையின் யுத்த சூழல் மேலும் மேலும் வீரியமடைந்து வரும் அதே வேளை சமாதானம், பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்களும் பல தரப்பாலும் வெளிநாடு உள்நாடு என்ற அனைத்து தரப்பினராலும் பேசப்பட்டு வருகின்றனர்.

இம்மாதம் முதலாம் திகதி நோர்வேயின் விஷேட தூதுவர் சொல்ஹெயிம் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரனையும் விடுத லைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சுப.தமிழ்ச்செல்வன் ஆகியோரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இப்பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகளின் நிலை யையும், அவர்களின் போராட்டத்தின் உண்மை நிலையையும் தமிழ் மக்கள் மீது இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் அழிப்புகள் இனத்துவேச நடவடிக் கைகள் பற்றியும் கூறியதாக செய்திகள் வெளிவந்தன. அத்துடன் சமாதானத்துக்கான அவர்களது பூரண விருப்பத்தையும் பிரபாகரன் கூறியிருந்தார்.

புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்தித்தது குறித்து அரசு தரப்பிலும் எதிர்கட்சித தரப்பிலும் பல்வேறுபட்ட கருத்து மோதல்கள் நிகழ்ந்தன நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

நிபந்தனையற்ற பேச்சு களுக்கு புலிகளின் தரப்பில் ஆதரவு இருந்த போதிலும் இதுவரையும் அரசாங்கம் பேச்சுக்கள் பற்றி தெளிவான கருத்துக்களை வெளி யிடவில்லை.

நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு இலங்கையில் எதிர்கட்சியிலும் ஆதரவு தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதே வேளை நோர்வே தூதுக்குழுவின் முடிவுடன் சமாதான முயற்சிகளை பேசிக் கொண்டு யுத்தத்துக்கான ஆயத்தங்களையும் வெளிநாடுகளிலிருந்து உதவி கோரும் செயற்பாடுகளிலும் அரசாங்கம் மறுபக்கம் இறங்கி யுள்ளமை வினோதமாக உள்ளது.

நோர்வேயின் சமாதானத் தூதுவர் பிரபாகரனுடனான நேரடிப் பேச்சுவார்த்தை முக்கியமானதாக கருதப்படுகிறது. சமாதானம் சமா தானம் என்று வாய் கிழிய கத்தும் எவராயினும் அவர்கள் புலிகளுடன் பேசாத எந்தப் பேச்சும் அந்த சமாதானத்துக்கு வழி வகுக்காது என்பதை புரிந்தும் புரியாதது போல் வெளிநாடுகளிலும் உள்நாட்டு பௌத்த பிக்குகள், இனவாதி களிடமும் நடித்து வருகின்றனர்.

அரசாங்கத்தின் செயற் பாடுகள் எப்போதுமே மற்றவனை வடிகட்டிய மடையன் என்ற ரீதியில் அமைவது வழக்கம் தான். தற் போதும் இதே நிலையே காணப் படுகின்றது.

வெளி நாடுகளிடமிருந்து தப்பிக் கொள்வதற்காக சமாதானப் பேச்சு என்று பேசுவதற்கு வெளி நாட்டு அமைச்சராக ஒரு தமிழனை நியமித்துக் கொண்டும் புலிகள் பேச்சுக்கு தயாரில்லை என்று தம் பட்டம் அடித்துக் கொண்டும் எந்த நாட்டுக்குச் சென்றாலும் ஆயுத உதவியும் இராணுவ உதவியும் கேட்டுக் கொண்டும் இங்கு நோர்வே சமாதான குழுவிற் பேச்சுவார்த்தை

(4ம் பக்கம் பார்க்க)

துடுப்பாட்ட சாதனைகளும் சோதனைகளும்

கிரிக்கட் விளையாட்டிலே, டெஸ்ட் போட்டிகளை விட ஒரு நாள் சர்வதேச கிரிக்கட் போட்டிகளேஅதிக முக்கியத்துவம் உடையதாகக் காணப்படுகிறது. ஒரு நாள் போட்டிகளை காண இரசிகர் கூட்டம் அலைமோதுவது இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. ஒரு நாள் சர்வதேச போட்டிகள் யாவும் ஐம்பது ஓவர்கள் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் ஒவ்வொரு அணியும் தமக்கு வழங்கப்பட்டுள்ள இந்த ஐம்பது ஓவர்களில் அதிக ஓட்டங்களை பெறவேண்டும் என ஆர்வத்துடன் முழுமூச்சாக துடுப்பெடுத்தாடுகின்றன. அதில் வெற்றியும் பெற்று விடுகின்றன. ஆனால் சில வேளைகளில் துரதிஷ்டவசமாக குறைந்த எண்ணிக்கையிலான ஓட்டத்தைப் பெற்று சகல விக்கட்டுக்களையும் இழக்க நேரிடுகிறது. அதிக ஓட்டங்களை எடுத்துசாதனைகளையும் குறைந்த எண்ணிக்கையான ஓட்டங்களை பெற்று வேதனைகளையும் தந்த முக்கிய அணிகளின் ஓட்ட விபரங்கள் இதோ

இலங்கை:-

இலங்கை அணி பெற்ற ஆகக் கூடிய ஓட்டம் 398 ஆகும். இதுவே தற்போதைய உலக சாதனையாக உள்ளது. இந்த ஓட்டம்1996ம்ஆண்டு கென்னியா விற்கு எதிராக நடந்த போட்டியில் பெறப்பட்டதாகும். இப்போட்டியின் போது அரவிந்த டி சில்வா 115 பந்துகளுக்கு முகம் கொடுத்து 145 ஓட்டங்களைப் பெற்றார். இதுவே இலங்கை அணி சார்பாக ஒருவர் பெற்ற முதலாவது உலகக் கிண்ணப்போட்டி சதம் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை கிரிக்கட் அணி பெற்ற ஆகக் குறைந்த ஓட்டம் 55.ஆகும்.1986ம்ஆண்டு மேற்கிந்திய தீவுகள் அணியுடன் இடம் பெற்ற போட்டியில் இலங்கை அணி 55ஓட்டங்களுக்குசகல விக்கட்டுக்களையும் இழந்தது. இதில் வேடிக்கை என்னவெனில், இலங்கை அணி ஒரு கட்டத்தில் 45 ஓட்டங்களுக்கு 2(இரண்டு) விக்கட்டுக்களை மாத்திரமே இழந்திருந்தது.என்பது குறிப்பிடத்தக்கது. இப்போட்டியில் கொட்னி வோல்ஸ் 4.3 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டத்தை மாத்திரம் கொடுத்து 5விக்கட்டுக்களை கைப்பற்றினார்.

இந்தியா:-

இந்திய அணி பெற்ற அதி கூடிய ஓட்டம் 384 ஆகும். இந்த ஓட்டம் 1999ம் ஆண்டு இலங்கை அணிக்கு எதிராக நடந்தபோட்டியில் பெறப்பட்டதாகும். இப்போட்டியில் கங்குலி 184 ஓட்டங்களையும், ராகுல் டிராவிட் 145 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்திய கிரிக்கட் அணி பெற்ற அதி குறைந்த ஓட்டம் 54 ஆகும். இதுஇவ்வருடம் சார்ஜாவில் இலங்கை அணியுடன் இடம் பெற்ற போட்டியில்இந்தியா 54ஓட்டங்களுக்குசகல விக்கட்டுக்களையும் இழந்தது. இப் போட்டியின் போது சமிந்த வாஸ் 14 ஓட்டங்களை கொடுத்து 5 விக்கட்டுக்களையும் முத்தையா முரளிதரன் 6 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுக்களையும் கைப்பற்றியது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பாக்கிஸ்தான்:-

இந்தஅணி துடுப்பாட்டத்தில் பெற்ற ஆகக் கூடிய ஓட்ட எண்ணிக்கை 371 ஆகும். இது 1996ம் ஆண்டு இலங்கைக்கு எதிராக் இடம் பெற்ற போட்டியின் போது பெறப்பட்டது.

பாகிஸ்தான் அணி பெற்ற ஆகக் குறைந்த ஓட்ட எண்ணிக்கை 43 ஆகும். 1993ம் ஆண்டு மேற்கிந்திய தீவுகள் அணியுடன்நடைபெற்ற போட்டியில் பாகிஸ்தான் 43 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கட்டுக்களையும் இழந்தது. இது ஒரு அணி பெற்ற ஆகக் குறைந்த ஓட்டமாக பதியப்பட்டுள்ளது. இப்போட்டியிலே வேகப்பந்து வீச்சாளர் கொட்னி வோல்ஸ் 16 ஓட்டங்களை கொடுத்து 4 விக்கட்டுக்களை வீழ்த்தினார். இப்போட்டியின் போது பாகிஸ்தான் மேற்கிந்திய தீவுகள் ஆகிய இரண்டு அணிகளுமே தங்களது துடுப்பாட்டத்தின் போது வீசப்பட்ட முதல் பந்து வீச்சில் தங்கள் ஆரம்ப விக்கட்டுக்களை இழந்தன.என்பது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியா:-

தற்போதைய உலக சம்பியனாகத்திகழும் அவுஸ்திரேலிய அணி பெற்ற அதி கூடிய ஓட்டம் 332 ஆகும். 1990 ம் ஆண்டு இலங்கைக்கு எதிரான போட்டியின் போதே இவ் ஓட்டம் பெறப்பட்டது. இப்போட்டியில்சிம்மன்ஓ டொன்னல் (Simon O Donnell) 18 பந்துகளுக்கு முகம் கொடுத்து 50 ஓட்டங்களை எடுத்து சாதனை படைத்தார். பின்இந்த சாதனையை சனத்ஜெயசூரிய முறியடித்தது அறிந்ததே.

இவ் அணி பெற்ற அதி குறைந்த ஓட்டம் 70 ஆகும். இது 1986ம் ஆண்டு நியுசிலாந்து அணியுடன்இடம்பெற்ற போட்டியிலே அவுஸ்திரேலியா 70 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கட்டுக்களையும் இழந்தது. இப்போட்டியில் அவுஸ்திரேலியா அணி206ஓட்டங்களால் தோல்வியைதழுவியது குறிப்பிடத்தக்கது.

மேற்கிந்திய தீவுகள்:-

இவ் அணி துடுப்பாட்டத்தில் பெற்ற ஆகக் கூடிய ஓட்டம் 360 ஆகும். இவ் ஓட்டம் 1987ம் ஆண்டு இலங்கை அணிக்கு எதிராக நடைபெற்றபோட்டியிலே பெறப்பட்ட தாகும்.இப்போட்டியின் மேற்கிந்தியதீவுகள் அணியின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களான விவியன் றிச்சட்ஷன் 125 பந்துகளை எதிர்கொண்டு 181 ஓட்டங்களையும் அத்துடன் டெஸ்மன்கெய்ன்ஸ்105 ஓட்டங்களையும் பெற்று இந்த ஓட்ட எண்ணிக்கைஉயர வழிவகுத்தனர்.

மேற்கிந்திய தீவுகள் அணி பெற்ற குறைந்த ஓட்ட எண்ணிக்கை 87 ஆகும். இது 1992ம் ஆண்டு அவுஸ்திரேலியா அணியுடன்இடம்பெற்ற போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 87 ஓட்டங்களுக்கு தன் சகல விக்கட்டுக்களையும் இழந்தது. இப்போட்டி அவுஸ்திரேலியாவின் முன்னணி வீரரான மார்க் டெய்லர் அவுஸ்திரேலியா அணித் தலைவராக கலந்து கொண்ட முதல் போட்டிஇதுஎன்பது குறிப்பிடத்தக்கது.

நியுசிலாந்து:-

இந்த அணி பெற்ற ஆகக் கூடிய ஓட்ட எண்ணிக்கை 348 ஆகும். இவ்ஓட்ட எண்ணிக்கை 1995ம் ஆண்டு இந்தியாவுக்கு எதிராக நடைபெற்ற போட்டியிலே பெறப்பட்டதாகும். இப்போட்டியில் நியுசிலாந்து அணியின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான நதன் அஸ்டில் 128 பந்துகளை எதிர் கொண்டு 114 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

நியுசிலாந்து அணி பெற்ற குறைந்தஓட்ட எண்ணிக்கை 74 ஆகும். 1990ம் ஆண்டு பாகிஸ்தானுடன் இடம் பெற்ற போட்டியில் நியுசிலாந்து அணி 74 ஓட்டங்களைபெற்றுசகல விக்கட்டுக்களையும் இழந்தது. இப்போட்டியில் பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர்களான வக்கார் யூனுஸ் 20 ஓட்டங்களை கொடுத்து 5விக்கட்டுக்களையும், வாசிம் அக்ரம் 16ஓட்டங்களுக்கு 2விக்கட்டுக்களையும் வீழ்த்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

கென்யா:-

இந்த அணி பெற்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை 347 ஆகும். இவ் ஓட்ட எண்ணிக்கைப் பங்களாதேஷ் அணியுடன் இடம் பெற்றபோட்டியில் பெறப்பட்ட தாகும்.இப்போட்டியில் சூடசாமா (Chudasama) 122ஓட்டங்களையும் ஓடினோ(Otieno) 144ஓட்டங்களையும் எடுத்தது குறிப்பிடத்தக்கது. இப்போட்டியின் போது சூடசாமா, ஓடினோ ஆகிய இருவரும் தங்கள் அணியின் ஆரம்பவிக்கட்டுக்காக 225ஓட்டத்தை இணைப்பு ஓட்டமாக பெற்றுக் கொடுத்து கென்ய அணியின் வெற்றிக்கு வழி வகுத்தனர்.

கென்னிய அணி பெற்ற குறைந்த ஓட்ட எண்ணிக்கை 103 ஆகும். இவ் ஓட்ட எண்ணிக்கை தென்னாபிரிக்க அணியுடன் இடம் பெற்ற போட்டியின் போதே பெறப்பட்டது. கென்யா அணி சர்வதேச போட்டிகளில் பலம் குன்றிய அணியாகக் காணப்பட்ட போதிலும் இந்த அணி மட்டுமே நூறுக்கு குறைவான ஓட்ட எண்ணிக்கையில் தங்கள் சகல விக்கட்டுக்களையும் இழக்காத அணி என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அ. சுதர்சன்
சுல்லடி

வாசகர் நெஞ்சம்

யாரும் கவனிக்காத தமிழ் பாடசாலையின் நிலைமை!

இது வரை வாழைச்சேனை வலையக்கல்வி அதிகாரிகளின் கண்ணிலும், கல்குடா தொகுதிப்பாராளுமன்ற உறுப்பினர் கண்ணிலும் படாத பாடசாலை என்றால் மாங்கேணிப்பகுதியில் அமைந்துள்ள மருதங்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஒன்றே இப்பாடசாலையில் சுமார் நூற்றி ஐம்பது சிறார்கள் கல்வி பயில்கிறார்கள். இதை பாடசாலை என்று சொல்வதற்கு மனவேதனையாய் இருக்கிறது. ஐந்துக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கடமையாற்றுகிறார்கள். பாடசாலை கம்புத்தடிகளால் கட்டப்பட்டுள்ளது. மேல் முகட்டின் ஒரு பகுதியில் மட்டும் ஓலைகள் காணப்படுகின்றன மறுபகுதியில் எந்த ஓலைகளும் கட்டப்படவில்லை. மழைபெய்தால் மாணவர்களும் ஆசிரியர்களும் பாடசாலையை விட்டு வெளியேற வேண்டும் இதனால் பாடசாலை மூடப்பட வேண்டிய நிலை. வெயில் காலத்தில் பாடசாலை அருகில் இரண்டு அத்தி மரமும் ஒரு பாலை மரமும் இருப்பதால் மரநிழலில் கல்விபயில்கிறார்கள். இந்த இக்கட்டான நிலையில் கல்வி கற்கும் சிறார்களுக்கு கருணை காட்ட அரசாங்க அதிகாரிகளோ பாராளுமன்ற உறுப்பினர்களோ விரும்பாவிட்டாலும் அத்தி பூத்தாப்போல் ஒரு சில பொது நிறுவனங்கள் அவ்வூர் சென்று வருகின்றன. அவர்களின் கண்ணில் கூட இப்பாடசாலையின் பரிதாபநிலை தெரியவில்லை போல் இருக்கிறது. எனவே இது விடயத்தில் தினக்கதிர் பத்திரிகையாவது வெளி உலகத்திற்கு தெரியப்படுத்தி ஏழை சிறார்கள் மழையில் நனைந்து வெயிலில் காயாமல் கல்வி பயில ஆவன செய்வீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

பொ.இளையதம்பி
இல.செ.சங்கம்

முன்னறிவித்தலின்றிய நீர் வெட்டின் காரணமாக பாதிப்புறும் மக்கள்

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கல்முனை நீர் வினியோகத் திட்டத்தின் மூலம் அப்பகுதி மக்கள் பெரிதும் நன்மையடைந்து வருகின்றனர். எனினும் இந்நீர் விநியோகத்திட்டத்தில் எதுவித முன்னறிவித்தலுமின்றி நடை ஏற்படுவது குறித்து அப்பகுதி மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக நற்பிட்டிமுனை மக்களில் அனேகமானோர் இக்குழாய் நீர் வினியோகத்தையே நம்பி வாழ்கின்றனர். இக்குழாய் நீர் விநியோகம் எதுவித முன்னறிவித்தலுமின்றி இடை நிறுத்தப்படுவதால் நீரை சேமித்து வைக்காமல் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு நீர் விநியோகத்தை இடை நிறுத்த வேண்டுமாயின் ஒரு முன்னறிவித்தலையோ அல்லது ஒவ்வொரு நாளும் எனின் ஒரு குறிக்கப்பட்ட நேரத்திலேயோ இடை நிறுத்துவதன் மூலம் அப்பகுதி குழாய் நீர் விநியோகத்தை நம்பி வாழும் மக்களின் சிரமங்களை குறைக்க முடியும் எனவும் தெரிவித்தனர்.

ஏ.எஸ்.முஜாகித்
கல்முனை

உணவு முத்திரைக் கூப்பனில் ஒரு புள்ளி வெட்ட அரை மணித்தியாலம் இரு புள்ளி வெட்ட?

மட்/வந்தாறுமூலையிலுள்ள கூட்டுறவுக் கடையில் இன்று வரை உணவு முத்திரையில் முதலாம் புள்ளிக்கு சாமான் கொடுத்து முடியவில்லை. பக்கத்திலுள்ள கிராமங்களிலுள்ள கூட்டுறவுக்கடையில் மூன்றாம் புள்ளிக்கு சாமான் கொடுத்து விட்டார்கள். ஒரு உணவு முத்திரைக்கு ஒரு கிலோ சீனிதான் கொடுக்கிறார்கள். ஒரு உணவு முத்திரைக்கு ஒரு புள்ளி வெட்டினால் அடுத்த புள்ளி வெட்டுவதற்கு அரை மணித்தியாலம் எடுக்கிறது. என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள். எனவே இதில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தயவாக கேட்டுக் கொள்கிறேன்.

க. சிவராஜ்
வந்தாறுமூலை

நிமலனின் மரணம் கொலையெனத் தீர்ப்பு

துப்பாக்கி வெடித்ததைத் தொடர்ந்து இருவர் ஓடிச் சென்றனர்!

(சே. பாலகுமாரன்)

மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் நிமலன் சௌந்தரநாயகத்தின் மரண விசாரணையில் கொலை என நேற்று தீர்ப்பளிக்கப்பட்டது. மரண விசாரணையில் சாட்சியமளித்த கூலித் தொழிலாளி ஒருவர் துப்பாக்கி வெடிச்சத்தங்கள் கேட்டதைத் தொடர்ந்து இருவர் கடற்கரையை நோக்கி ஓடியதையும் ஒருவர் சேட்டும் மற்றவர் ரீ சேட்டும் அணிந்திருந்தனரென்றும் ஒருவர் கையில் துப்பாக்கி வைத்திருந்தாரென்றும் தெரிவித்தார்.

நேற்று [illegible] இவ[illegible] தோரால [illegible] வைத்து [illegible] கொல்லப்பட்ட மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் நிமலன் சௌந்தர நாயகத்தின் மரண விசாரணை மட்டக்களப்பு வைத்தியசாலையில் மட்டக்களப்பு மேலதிக நீதவான் அப்துல் கபூர் மரணவிசாரணை நடத்தினார். ஏறாவூர் குற்றப் புலனாய்வுப் பிரிவை சேர்ந்த பொலிஸ் சார்ஜன் பி. ஜெகநாதன் சாட்சியங்களை நெறிப்படுத்தினார். அப்போது முதலாவது சாட்சியான காலஞ்சென்ற நிமலன் சௌந்தர நாயகத்தின் மனைவி கிறிஸ்டியா ஜெயரஞ்சனி தனது வாக்கு மூலத்தில் தெரிவித்ததாவது. எனது கணவன் சம்பவ தினமான நேற்று அவரது கட்சி ஆதரவாளர் லோகநாதன் என்பவருடன் மட்டக்களப்பு நகருக்கு செல்வதற்கு மோட்டார் சைக்கிளில் சென்றார். மாலையாகியும் வீடு திரும்பி வரவில்லை.

நேற்றுமாலை 6.00மணியளவில் கோரகல்லி மடுவில் வசிக்கும் நிரஞ்சன் என்பவர் எனது வீட்டிற்குவந்து கணவரும் எனது அவருடன் கூடச்சென்ற லோகநாதனும் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இரவு 12.00 மணியளவில் கனடாவில் வசிக்கும் எனது கணவனின் தம்பி நிமலச் செல்வன் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு எனது கணவர் இறந்துவிட்டதாகத் தெரிவித்தார்.

"ஐயோ நிமலன் மாஸ்டர்." என கத்தும் சத்தம் கேட்டது.

இரண்டாவது சாட்சியான நல்லசேகரன் கதிரேசன் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது எனது இருப்பிடம் கிரான் நான். வாழைச்சேனை, கிரான் கூட்டுறவு சங்கத்தில் வேலை செய்து வருகின்றேன்.

சம்பவ தினம் காவல் கடமையில் இருந்தேன் அப்போது. மாலை 6.15 மணியளவில் பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு இது துப்பக்கமாக இருக்கும் கிரவல் வீதிச் சந்தியில் துப்பாக்கி சூட்டுச் சத்தங்கள் கேட்டன.

நான் உடனே கீழே படுத்து மறைந்திருக்கும் வேளை சுமார் ஒன்பது, பத்து வயது மதிக்கத்தக்க சிறுமிகள் இருவர் கதவை தட்டிக்கொண்டு கதவை திறவுங்கள் என்றார்கள் நான் உடனே கதவை திறந்து உள்ளே அவர்களை வரவழைத்தபோது பக்கத்துவீட்டு தயாவதி என்பவர் "ஐயோ நிமலன் மாஸ்டர் அப்பா" எனக் கத்தும் சத்தம் கேட்டது அவ்வேளை. கூட்டுறவு சங்கத்திற்கு இது துப்பக்கமாக அமைந்துள்ள கடற்கரை பக்கமாக செல்லும் வீதியில் இருவர் ஓடினர் அவர்களில் நீலக்கலர் டீ சேட்டு அணிந்தவர். கையில் துப்பாக்கி இருந்ததை கண்டேன். பொலிஸ் இராணுவம் போன்றோர் பாவிக்கும் துப்பாக்கி களுடன் ஓடினார்கள். அவர்கள் கிட்டத்தட்ட 150 - 200 மீற்றர் தூரம் அளவில் ஓடிச் சென்றனர். அவர் களை நான் கண்டால் அடையாளம் காட்ட முடியும். எனத் தெரிவித்தார்.

இந்த விசாரணையின் போது இம்மரணம் கொலை என மட்டக்களப்பு நீதவான் தீர்ப்பு அளித்ததோடு இது இனந்தெரியாத ஆயுததாரிகளால் மேற்கொள்ளப்பட்ட கொலை எனவும் தெரிவித்தார்.

புனர் வாழ்வு.....

உயிரிழக்க நேரிட்டது.

திறந்த வெளி சிறைச்சாலையில் உள்ள 12வயது சிறுவன் ஒருவன் இருப்புக் கம்பியால் தாக்கப்பட்ட தன் காரணமாக கடும் காயங்களுக்கு ஆளாகி இருக்கிறான். இத்தாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் நீதி விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை.

இலங்கை அரசு இவற்றை விசாரிப்பதற்கு சர்வதேச விசாரணை பார்வையாளர்களை அழைக்கவேண்டும். அல்லது ஸ்கொட்லாந் விசாரணையாளர்களை வரவழைக்கவேண்டும் அல்லது அனுபவம் வாய்ந்த விசாரணையாளர்களை அனுப்பி வைக்குமாறு பொதுநலவாய நாடுகளை கேட்க வேண்டும்.

கடந்த காலங்களில் பொலிசாருக்கு எதிரான குற்றச் சாட்டுக்களை திருப்திகரமாக விசாரணைகள் செய்யப்படாமையால் மேற்படி விடயத்திலும் சந்தேகம் தோன்றியுள்ளது.

இவ்வாறான நிலையில் சிறைக்கைதிகளுக்கு சிறந்த பாதுகாப்பு வழங்கத்தவறிய இராணுவம் பொலிஸார் மீது ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேவேளை தாக்குதலில் இருந்து தப்பிப்பிழைத்தவர்களுக்கு இனிமேலாவது இவ்வாறான உயிரழப்புக்கள் ஏற்படாவண்ணம் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். எனவும் தெரிவித்தார்.

கடைகள்.....

கல்குடாத் தொகுதி எங்கும் வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டிருப்பதுடன், கண்ணீர் அஞ்சலி பதாதைகளும் தொங்கவிடப்பட்டிருக்கின்றன.

நேற்று காலையிலிருந்தே ஏறாவூர், செங்கலடி, வந்தாறுமூலை, சித்தாண்டி, சந்திவெளி, கிரான், வாழைச்சேனை போன்ற இடங்களில் பெருந் தொகையான பொதுமக்களும், சிறுவர்களுமாக வீதியோரங்கள் நெடுகிலும் கூடி நின்று தமது தொகுதி மைந்தனின் பூதவுடலின் வருகையை எதிர்பார்த்து கவலையுடன் நின்ற காட்சியை காணக்கூடியதாக இருந்தது.

நகரில் ஒலிபெருக்கி மூலம் சோககீதம் இசைக்கப்பட்டுள்ளது. வாழைச்சேனை வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் தமிழ் முஸ்லிம் கடைகள் பூட்டப்பட்டுள்ளன.

அரசாங்க அலுவலகங்களிலும் ஊழியர்களின் வருகை குறைவாக இருந்ததால் நண்பகலுக்குப் பின்னர் அலுவலகங்களும் மூடப்பட்டன. வீதிகள் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் கிடந்ததுடன் வாகனப் போக்குவரத்தும் குறைவாகவே இடம் பெற்றது.

இப்பிரதேசத்திலுள்ள பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகைதரா ததால் பாடசாலைகள் இயங்க வில்லை. ஆசிரியர்கள் மாத்திரம் நண்பகல் வரை பாடசாலையில் இருந்து விட்டு வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

இதேவேளை பூதவுடல் வீட்டிற்கு சென்றதும் வாசஸ்தலத்தில் கூடிய பல்லாயிரக் கணக்கான மக்கள் பூதவுடலைப் பார்வையிடுவதற்காக முண்டியடித்ததை கட்டுப்படுத்த முடியாமல் கஷ்டப்பட வேண்டியிருந்தது. பொதுமக்கள் நீண்ட வரிசையில் பூதவுடலைப் பார்வையிடு வதற்காகக் காத்துக் கிடந்தனர். பூதவுடல் இன்று காலை 11.00 மணிவரை வாழைச்சேனை இல்லத்தில் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும்.

பின்னர் மட்டக்களப்பு மக்களின் பார்வைக்காக காலை 11.00 மணிக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு கோட்டை முனை செல்வநாயகம் மண்டபத்தில் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிவரை வைக்கப்பட்டிருக்கும். 10.00மணிக்கு இரங்கல் உரை நடைபெற்று மீண்டும் நல்லடக்கத்திற்காக முறக்கொட்டான் சேனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 4.00 மணிக்கு முறக்கொட்டான் சேனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

பயப்பட வேண்டாம்.....

சைக்கிளில் புறப்பட்டோம். வந்தாறுமூலை, மட்டக்களப்பு பகுதிகளில் உள்ள திருத்த வேண்டிய வீதிகளை பார்வையிட்டதுடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி பணிகள் பற்றி பலரையும் சந்தித்து உரையாடினார். நண்பகல் மட்டக்களப்பு நகரில் உள்ள கடை ஒன்றில் இருவரும் சாப்பிட்டோம். பின்னர் 4மணியளவில் மட்டக்களப்பிலிருந்து புறப்பட்ட நாங்கள் ஏறாவூர், செங்கலடி, வந்தாறுமூலை, சித்தாண்டி ஆகிய இடங்களிலும் சிலரை சந்தித்து கதைத்து விட்டு வாழைச்சேனை நோக்கி சென்று கொண்டிருந்தோம்.

"மொறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமுக்கும் கிரான் இராணுவ முகமுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தால் சென்று கொண்டிருந்த போது கிரான் பலநோக்கு கூட்டுறவு சங்க கட்டிடப்பக்கமிருந்து வெடிச்சத்தம் கேட்டது. வெடிச்சத்தம் கேட்கிறது. கவனம் என நான் கூறியபோது "பயப்பட வேண்டாம் அண்ணன்" என கூறிய சில வினாடிகளில் துப்பாக்கி சூடுபட்டு நிமலன் கீழே விழுந்தார். நானும் விழுந்தேன். என அவர் தெரிவித்தார்.

சம்பவத்தை நேரில் கண்ட கிரானைச்சேர்ந்த மரக்கறி வியாபாரி ஒருவர் சாட்சியமளிக்கையில் "வெடிச்சத்தம் கேட்டது. பின்னர் வீதியில் வந்து பார்த்தபோது நிமலன் மாஸ்டரும் இன்னுமொருவரும் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர். அவர்களை உடனடியாக அவ்வீதியால் வந்த வாகனத்தில் ஏற்றி வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தோம். அப்போது வீதியோர காவல் கடமையில் இருந்த இராணுவத்தினரும் வந்துசேர்ந்தனர்" என்றார்.

இராணுவ.....

அரசியல் தீர்வையா பின்பற்றப் போகின்றது என்பதைத் விரைவில் தீர்மானிக்க வேண்டும்.

மேலும் அவர் தெரிவிக்கையில் பெரும்பாலான அரசியற் கட்சிகள் சமாதானத்தையே விரும்புகின்றன. இந்த சூழ்நிலையில் ஏனைய நிறுவனங்களைப் போன்று பாராளுமன்றமும் இருபத்தி ஒராவது நூற்றாண்டின் ஜனநாயகத்திற்கு தேவையான விதத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜனநாயகம் செயற்படுவதற்கு ஸ்திரமான சமூகம் ஒன்று ஏற்படுவதற்கு அரசசேவை, பொலிஸ்சேவை, தேர்தல், நீதித்துறை என்பவற்றிக்கு சுதந்திரமான ஆணைக்குழுக்கள் நிறுவப்படுவது அவசியமாகும்.

அரசியல் பொதுத்திட்டம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்துள்ள யோசனை குறித்து சகல கட்சிகளுடனும் ஐ.தே.கட்சி பேச்சுக்களை நடத்த தீர்மானித்துள்ளது. எனவும் தெரிவித்தார்.

நிமலனின்.....

தெரிவித்தார்.

ஆனந்த சங்கரியும் குழுவினரும் அஞ்சலி செலுத்திய பின் தமது வேனில் ஏற விடாது நிமலனின் ஆதரவாளர்கள் சூழ்ந்து நின்று கல்குடாப் பிரதிநிதித்துவத்தை வேறுயாருக்கும் கொடுக்கவிட மாட்டோம். என கூச்சலிட்டனர். பின்பு அங்கு குழுமியிருந்த த.வி.கூட்டணி ஆதரவாளர்களிடம் ஆனந்த சங்கரி இதற்கான பத்து பேர் கொண்ட விஷேட குழு அமைத்து இறுதி முடிவெடுப்போம் எனக் கூறினார். இதன் பின்பே த.வி.கூட்டணி தலைவர் ஆனந்த சங்கரியும் குழுவினரும் செல்வதற்கு மரண வீட்டில் குழுமியிருந்த பொது மக்கள் அனுமதித்தனர்.

சிவானந்தா முதலிடம்

(ராதிகா)

மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா தேசிய பாடசாலை நேற்று நடைபெற்ற வடக்கு கிழக்கு மாகாண "டிஸ்கவரி" புதிர் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இதேவேளை இன்று நடைபெறும் தேசிய மட்ட நீதியிலான போட்டியிலும் கலந்து கொள்கின்றது.

மரண அறிவித்தல்

முறக்கொட்டான் சேனையை பிறப்பிடமாகவும் வாழைச்சேனையை வதிவிடமாகவும் கொண்ட மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்

நிமலன் சௌந்தரநாயகம்

07 – 11 – 2000 செவ்வாய் கிழமை அகால மரணமானார்

அன்னார்

காலம் சென்றவர்களான **விக்டர் சௌந்தரநாயகம், திருமதி சொர்ணமணி** ஆகியோரின் அன்பு மகனும்.

ஜெயரஞ்சனி

(ஆசிரியை புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயம்)

அன்னையின் அருமைக் கணவரும்

நிமல சொர்ணன், நிமல செல்வம் (கலை II), காலம் சென்ற **நிமலேந்திரன், நிமலினி** (கலை II)

ஆகியோரின் சகோதரரும்

தேவராணி, யோகராணி, காமினி, தயாபாஸ்கர்

ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் வாழைச்சேனையில் அன்னையின் இல்லத்தில் வைக்கப்பட்டு 09 – 11 – 2000 வியாழக்கிழமை காலை 11 மணிக்கு மட்டக்களப்பிற்கு எடுத்து வரப்பட்டு பிற்பகல் 3 மணியிலிருந்து மறுநாள் 10 – 11 – 2000 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிவரையும்

மட்டக்களப்பு திருமலை வீதி செல்வநாயகம் மெதடிஸ்த மண்டபத்தில்

பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அஞ்சலி உரையின்பின் முறக்கொட்டான் சேனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 4 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்.

~ குடும்பத்தினர் ~

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிக்கேஷன் நிறுவனத்தினரால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.